KALANILAYAM

தனிப்பிரதி விலை அணா 0-2-6.

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0

புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

கலாநிலயம் :—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol. 8] 1935 ௵ பிப்ரவரி ௴ 28 ௳ [No. 9

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 129

2. சூரியன் - (நக்ஷத்திரசாலை)
E. T. இராஜேஸ்வரி அம்மாள் M.A., L.T. 132

3. ஒத்தெல்லோ (அங்கம் 1. களம் 3.)
Shakespeare's—"Othello" 134

4. கம்பராமாயணம் (கார்காலப் படலம்)
T. N. சேஷாசலம் B.A., B.L. 137

5. வில்லிபாரதம்—(துரியோதனன்)
K. T. விஜயராகவாச்சாரியார் B.A. 140

6. சூளாமணி (இரதநூபுரச் சருக்கம்)
வித்துவான்
T. P. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை M.A., B.L. 142

7. வர்த்தமானம் 144

## க லா நி ல ய ம்

### கடவுட் சித்தம் 6.

பிரபஞ்ச மடங்கலும், இப் படைப்புப்பொருள்கள் அனைத்தும், நன்மை என்னும் ஒன்றினை நாடிச் செல்கின்றனவென்றும், அந் நன்மை என்பதுதான் பொருள்களின் மெய்ம்மை என ப்ளேடோவுடன் கொள்ளலாம் என்றும், அம் மெய்ம்மை அல்லது நன்மை என்பதன் முழுத்தொகுதியே கடவுளாம் என்றும், அன்னது நம்மை வளர்த்து நமக்கு ஒளியுங்கொடுத்து அவ்வொளியினால் தன்னையே நமக்குத் தெரிவித்துக்கொள்கின்றதென்றும், சென்றவாரத்து இதழில் விளக்கி யெழுதலாயினோம். ப்ளேடோ திருவள்ளுவர் அனையவர்தம் உதவிகொண்டு இவ்வாறு, தோற்றத்தினின்று உண்மைக்கும், அவ்வுண்மையையுங்கடந்து மெய்ம்மைக்கும் ஏறி யேறி எய்திய நாம், இனி, அம்மெய்ம்மையினின்றுஉண்மைக்குமீண்டும் சற்றே இங்கு இறங்கிவரவேண்டியவர்களாயிருக்கின்றோம். மெய்ம்மையைத் தொட்டபின்னரே, உண்மையினின்று வழுவாமல் நிலைநிற்க இயல்வதாவதுடன் அந்நிலை பயனுடையதும் ஆகும். இதன் அவசியத்தை உட்கொள்வதற்கு நாம், வேறு இரண்டொரு தத்துவநூலாசிரியர்களின் கருத்துக்களையும் முடிவுகளையுந் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம்.

தற்காலத்தவராகிய அலெக்ஸாண்டர் என்பவருடையகொள்கைகளை இந்தக் கட்டுரைக்கு வேண்டிய அளவு முதலில் கூறலாம்:—

"உலகத்துப் பொருள்கள் ஒருவகை நிலைமையை அடையும்போது, அவைகளில் உயிரென்னும் தன்மை வெளிப்படுகின்றது. இவை இன்னுஞ் சில நிலைமைகளை அடையுங்கால், அவ்வுயிர்ப்பொருள்களின் மற்றொரு தன்மையாக ப்ரக்ஞை (Consciousness) வெளிப்படுகின்றது. பொருட்டன்மை உயிர்த்தன்மை பரக்ஞைத்தன்மை என்னும் இவை ஒன்றைவிட ஒன்று படிப்படியாய் உயர்ந்த தன்மைகளாம். மனிதன், தன் புலனாலும் புத்தியாலும் விடயங்களை அறிகின்றான்; மற்று ப்ரக்ஞையையோ அனுபவிக்கின்றான். ஒன்றினை அறிவதற்கும் அதனை அனுபவிப்பதற்கும் வேற்றுமை அதிகமுளது. பிரபஞ்சத்தோடு ஒன்றாய்க் கலந்து உணர்கின்ற நிலையை 'அனுபவம்' என்றும், வேறாகப் பிரித்துப் பார்க்கிற நிலையை அறிவென்றும் அழைக்கலாம். மனிதன் தனக்குமேலானவற்றை அனுபவிப்பவனும் தனக்குக்கீழானவற்றை அறிபவனும் ஆகின்றான். மனிதனது தன்மைகளில் எல்லாம் மிக்கமேலானது இப்பிரக்ஞையேயாயினும் அதனினும் மேலாயவொரு தன்மை இந்தப் பிரபஞ்சத்தில் இருக்க இயலாதென்று எண்ணுவது நியாயமன்று. இதற்குமேல் இனி இல்லையென்று யாதினும் சிறந்ததாய ஒரு தன்மையை அலெக்ஸாண்டர் தெய்வத்வம் என்று அழைக்கிறார். பிரஞை என்பது எப்படி மனிதனது மிகச் சிறந்த தன்மையாக இருக்கின்றதோ அப்படியே தெய்வத்வம் என்பதைக் கடவுளின் மிகச்சிறந்த தன்மையாகக் கொள்ளல் வேண்டும் என்கின்றார். பிரக்ஞை என்னும் இத்தன்மைக்கு 'மனிதன்' எனப்படும் ஒன்று பொருளாக இருப்பது

போல், தெய்வத்வம் என்னுந் தன்மைக்குப் பொருளாகவல்ல கடவுளாய் எதனைக்கொள்வது என்னுங் கேள்வி பிறக்குமானல் அதற்கு விடையாக அவர், இப்பிரபஞ்சம்முழுவதையுமே கடவுளின்உடலாகக் கொள்ளல்வேண்டுமென்று கூறுகின்ருர். எனினும், இந்தத் தெய்வத்வம் என்னுந் தன்மை எவ்வகைத்து என்பதை நம்மால் இயம்ப இயலாது; அது ஓரே தன்மையில் நிலைநிற்காமல் மாறிக்கொண்டேயும் இருக்கலாம்; ஆயினும், அந்தத் தெய்வத்தன்மையை இடைவிடாமல் நாடியவண்ணமே இருக்கின்ற இப்பிரபஞ்சமாக ஒருகடவுளோ என்றும்'உளது. தெய்வத்தன்மையை அடையும்பொருட்டுக் கடவுளே இப்பிரபஞ்சமயமாகவிருந்து முயல்வதாற்ருன், மனிதர் அக்கடவுளை நாடியடைந்து அவரோடு உறவுகொண்டாடவேண்டுமென்று இத்துணை அவாவுகின்றனர். கடவுள்தான் மேற்கொண்டிருக்கின்ற அம் முயற்சியின் மேன்மையானது மனிதரை, அறிந்தோ அறியாமலோ, அக்கடவுளின்பால் வசியப்படுத்திவிடுகின்றது. தெய்வத்வத்தைத் தேடுகின்ற இவ்வுலகமானது அதனை அடையும்படி நாம் உதவிசெய்யவல்லதைச் செய்துவைப்பதுதான் பல்வேறு மதங்களின் தொழில். மானுட விவகாரங்களில், தீமையை நன்மை வெல்வதற்கு நாம் செய்யக்கூடியவைகளைச் செய்வதுதான் அவ்வுதவியாம்.''

தத்துவத்துறையில் அலெக்ஸாண்டர்செய்த இம் மாபெரும் ஆராய்ச்சியின்பயனாக, கடவுளே பிரபஞ்சமாக இருந்து தெய்வத்வத்தை நாடியடைய முயல்பவராகின்ருர் என்னும் முடிவை எய்தினர். சிந்திப்போர் சிந்திக்குந்தோறும் சிந்தனைமுழுவதும் தித்திக்குமொரு தீஞ்சுவைவாய்ந்த முடிவாம்இது. இம்முடிவினின்றுநாம்பெறவல்லஉதவிமிகப்பெரியது. இதன்பின், 'கடவுட் சித்தம்' என்பது புதியதொருபொருளுங் குறிப்பும் பெறுகின்றது. கடவுள்,நம்மிடத்தில் இருந்து எதிர்பார்ப்பதை அவருடையசித்தம் என்று அழைப்பதற்குப்பதிலாக, அக்கடவுள் தானே எய்தவேண்டுகின்ற அத்தெய்வத்தன்மையே அவருடைய சித்தமாம் என்றுமதிப்பதற் குரியவர்களாகின்ருேம். பிரபஞ்சமனைத்தும் எந்திரம்போல் சுழல்வதொன்றின்றி, உயிருள்ளதாய் ஒரு மாபெரும் நன்மையை நாடிநடக்கின்றது என்று ப்ளேட்டோ கூறியிருத்தலோடு, கடவுளே இப்பிரபஞ்சமாகத் தெய்வத்தன்மையை அடைய நாடுகின்ருர் என்று அலெக்ஸாண்டர் கூறுவதையும் சேர்த்து நோக்கி, இவ்விரண்டையும் 'மெய்ந்நெறி நன்மையன்' என்ற கம்பருடைய கருத்துடன் இணக்குங்கால், நம் வாழ்க்கையின் நோக்கம் புதியதோர் அகலமும் அழகும் வாய்ந்த நன்மையாகக் காட்சிகொடுத்துத் திகழ்தல் வேண்டும். எனின், கடவுளின் சித்தத்தின்படி நாம் நடக்க முயல்வதே நல்வாழ்க்கையாம் என்று நினைப்பதனினும், கடவுளின் சித்தத்தை அவருக்கே நிறைவேற்றிவைத்தல் மானுட வாழ்க்கையின் மகத்துவமாவதை மனத்திற்கொள்ளுமாறு அலெக்ஸாண்டர் தூண்டுகின்ருர். தீமையை நன்மை வெல்லுமாறு [illegible] நன்மைக்குத் துணைபுரிதலே அதற்கு நாம் செய்[illegible] தருவது என்பதும் இவ்வகையில் மிகப் புதியதோர் பொருள்பெற்றுத் திகழ்கின்றது. நாம் முன்னேற்றமடையக் கடவுளின் உதவியை வேண்டுவதனினும், கடவுளின் முன்னேற்றத்தின்பொருட்டு நாம் முயல்வதே வாழ்வாங்கு வாழ்வதாம் என்னுஞ் சிந்தனைக்கினி உரியவர்களாகிருேம். நன்மையானது தீமையை வெல்லவெல்ல, கடவுளின் சித்தம் அவருக்கு நிறைவேறி நிறைவேறி அவர்தம் தெய்வத்தன்மையை அடைகிற நன்மையின் திறத்தில்கலந்துகொள்வதே நம்முடைய கடமையும் கருமமும் ஆகும் என்றபின், நாம்வாழ்க்கைவீரர்களாவதுகடவுளின்பொருட்டேயன்றி நம்பொருட் டன்று. அவ்வலெக்ஸாண்டரின் மதத்தின்படி கடவுள் தன் தெய்வத்தன்மையை அடைவதற்கு உதவியாக நாம்நன்மையைநாட்டவேண்டியவர்களாயிருக்கின்ருேம். நன்மை எது தீமைஎது என்கின்ற அப்பழைய கேள்வியை இங்கு எழுப்பிக்கொண்டு அதனைச் சுற்றிச்சுற்றியிப்பொழுது வட்டமிடவேண்டா. இதுபற்றிய வாதங்கள் எவையேயாயினும் ஆகுக. யாவரே யாயினும் அவரவர்க்கு அவரவர் மனச்சாக்ஷியே நன்மை யிது தீமை யிது என்பதை அறிவுறுத்தும். ஒருவர் மனச்சாக்ஷி நன்மையென்று கொள்வதை மற்ருெருவர் மனச்சாக்ஷி தீமையென்று கொள்ளலாம். அதுவொரு பொருளில்லை. அவரவர் தம் மனச்சாக்ஷி நன்மையென்று சொல்லுவதைத் தாம் ஏற்றுக்கொண்டாற்போதும். யாரும் யாருக்கும் நன்மை தீமைகளைக் கற்பிக்கவும் இயலாது; இயன்ருலும் பயன் விளையுமோவென்பது மிகப் பெரிய சந்தேகம். ஆயினும்,இத்திறத்தில் ஒருவர் மற்றவர்க்கு இயற்றவல்லது யாதுமேயில்லை என நாம் இங்கு இயம்பப்புகுகின்ருேம் அல்லோம். நன்மை என்பது இது, தீமை என்பது இது என்பதனை எவ்வெவர்க்கும் அவரவர் மனச்சாக்ஷிதான் கூறவேண்டியதும் கூறக் கூடியதுமாக இருந்தாலும், அவ்வாறு அது வகுத்துக்கூறியபடி நன்மையை ஏற்றுக்கொண்டு தீமையை விலக்க அவர் உடன்பட்டாலல்லவோ அதனிற் பயன்காணலாம். எனின், நம் மனச்சாக்ஷியை நாம் பின்பற்றும்படி பெரியோர் செய்யக்கூடிய உதவிகளும்உள.' அவ்வுதவி இருவகைப்படும். நன்மை தீமைகளை மனச்சாக்ஷி நாடி உரைத்தபின்னரும், மனிதர் அப்போதனையின்படி நடக்காதிருப்பதற்குக் காரணம் இரண்டு. ஒன்று ஐயம், மற்றது பயம். இவ் வையத்தின் தன்மையை முதலிற் சிறிது சோதிப்போம்.

நன்மையைத் தெரிந்துகொள்வது வேறு, அந்நன்மையின்நன்மையை அறிந்துகொள்வதென்பதுவேறு. நன்மை என்னும் அப் பிரபஞ்சதத்துவத்தைத் தம் சுய இலாபங்களோடும் அவ்விலாபங்களுக்குரிய உபாயங்களோடும் மனிதர் மயங்கிவிடுகின்றனர். நன்மை என்று தெரிந்த அது, தம்முடைய இலாபத்திற்கு மாருக இருப்பதுபோல் தோன்றினல் அந்நன்மையின் நன்மையை அயிர்க்கத் தலைப்பட்டு, அந்நன்மைக்கு எதிராகிய தீமையின் தீமையைமறுத்து, இறுதி[illegible]மையையே மனிதரிற் பெரும்பாலோர் புரி[illegible]க் காண்கின்ருேம். இன்னவர், நன்மையை அறியாதவர் அல்லர்; நன்மையின் நன்மையை அயிர்த்தவர். இன்னவர், தீமையை அறியாதவர் அல்லர், தீமையின் தீமையையே அயிர்த்தவர். வர்த்தகம்வழக்கு உத்தியோகம் முதலிய விவகாரங்களில், 'இலஞ்சம்' நடமாடாம லிருத்தலே நன்மை என்பது கொடுப்போர் வாங்குவோர் ஆகிய இருதிறத்தோரும், தம் மனச்சாக்ஷியைக் கொண்டு நன்கு தெரிந்துகொண்டிருப்பவர்களே. உத்தியோகத்தில் விடுமுறைபெறுவதற்காகவும், வேறு வேறு இடங்களுக்குத் தம்மை மாற்றிக்கொள்ளவும், பொய்யாய நோய்ப்பத்திரம் வைத்தியரிடம் விலைக்குவாங்கி அதிகாரிகளுக்குஅனுப்பாமையே நன்மையா மென்பதும், மாருத மனச்சாக்ஷி கூறுகின்றவைகளில் ஒன்று. இதுவே நன்மையென்பதை யாரும் மறுப்பதில்லை. இலஞ்சங் கொடுக்காதிருப்பதும் பொய்ப் பத்திரம் அனுப்பாதிருப்பதும் தீமையாதலால், அத்தீமைகளைச் செய்யவேண்டுமென்று நினைப்பவர் எங்குளர். இன்னவாறே, மானுட விவகாரங்களின் மிகச் சிறிய செய்திகள்முதல் மிகமிகப் பெரியசெய்திகள் வரையில் அனைத்தையும் உற்று நோக்குங்கால், நன்மை இன்னதென்று தெரிந்திருந்தும், அந்நன்மையின் நன்மையில் நம்பிக்கையில்லா எளிமையே எல்லோரையும் சஞ்சலப்படுத்துகின்றதென்னும் நுட்பத்தை உணரலாம். இப்படியே தீமை தெரிந்திருந்தும் அத்தீமையின் தீமை நம்பப்படாமற்போகின்றது. நன்மையால்நஷ்டமும் தீமையால் இலாபமும் அடையலாம் என்னும் ஒரு பொய்யெண்ணத்திற்கு மனிதர் தம்மை இரையாக்கிக் கொள்கின்றனர்.

மனச்சாக்ஷி அறிவுறுத்துகின்ற நன்மையில் தலைநிற்காதிருப்பதற்கு மற்ருெரு காரணமாவது பயம். தருமத்திற்கு நாம் அஞ்சவேண்டும் என்பர்மேலோர். மற்று, அவர் எதிர்பார்க்காத வேருேர் பொருளில் அவ்வாசகம் பெரும்பாலோரால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. தருமத்தினின்று தவறுவதற்கு அஞ்சவேண்டுமென்பது அதன் பொருளாயிருக்க, தருமத்தையேகடைபிடிப்போமாளு லது நம்மைப் பிழைக்கமாட்டாதபடி கெடுத்துவிடும் என்று மிக அஞ்சியே அனைவரும் விவகரிப்பது கடனுகின்றது. 'நல்லவனுக்குக் காலமில்லை' என்ற அவலச் சொல் நடமாடாத இடம் இல்லை. வாய்மையே வலி, என்றற்கு மாருக, 'வாய்மைக்கு நாம் பலியாகவோ' என்று நடுங்குகின்றனர். நன்மையும் இது, அந்நன்மையின் நன்மையும் உளது என்ற அறிவு எய்திய பின்னும் அவ்வறிவினைத்தொடர்ந்து நடப்பதற்கு இதயம் வேண்டும். ஆதலின், அவ்விதயம் திண்ணியாதல் சாலவும் அவசியமாகின்றது. ஆதலின், நன்மைதீமைகளை நாடியுரைப்பதற்கு அவரவர் மனச்சாக்ஷியே போதுமாயினும், அம் மனச்சாக்ஷியின் நல்லுரை செல்லவல்ல சொல்லாவதற்குச் சான்ருேர் உபதேசங்களும் உயரியநூற்கல்வியும் கவிதையின் உதவியும் நயமுடையகலையின் நட்பும் இவையனைய ஏனைய பிறவும் மனிதருக்கு இன்றியமையாதனவாம்.

வேறும் ஒன்று இங்குவிளம்பவேண்டும்.''கடவுட் சித்தம்'' என்பது, கடவுளே தன்னுடைய தெய்வத்வத்தை எய்தற்குரியமுயற்சியில் ஈடுபட்டிருக்கின்ருரெனக் கூறுகின்ற அலெக்ஸாண்டரின் கொள்கையின்படி அடைகின்றபொருளைநாம் அகத்திற்கொள்வோமாயின், பிறகு, 'கடவுள் ஏன் தீமையைப்படைத்தார்'' என்ற அவ் வீண்கேள்வி விளையாமற் போய்விடும். அவரே தீமையை வெல்ல முயல்கின்றவராகவும் அவ்வெற்றிக்கு மனிதருடைய உதவியை வேண்டியவராகவும் இருக்கும்பொழுது, அவர் தீமையைப் படைத்தார் என்ற சொல் எங்கிருந்து வருதல்கூடும். ஆயின், தீமைதான் எவ்வாறு வந்தது என்று கேட்கலாம். இந்தக் கேள்வியும் மிகப் பழையது. அதற்குரிய விடைகளும் பலப்பல. கடவுளின் இருக்கையோடு தீமையும் இருப்பது பொருத்தமற நிற்பதாலும், நன்மை யுளதெனின் தீமையும் உளதென்னலவ்வ வேண்டியது இன்றியமையாத தாவதாலும், இந்தியதேயத்துத் தத்துவநூலாசிரியர்களிற் சிலர், நன்மை தீமை இரண்டுமே இல்லையென்று இயம்பிவிட்டார். இதனை இயம்பியதுமன்றியே இதற்கேற்ற காரணங்களாக அவர் காட்டியிருப்பவைகளும் மிகவும் அருமையும் நுட்பமும் வாய்ந்தன. ஆயினும் மேனுட்டுத் தத்துவ ஆராய்ச்சியாளர் ஒருவர் எல். டி. ஹாப்ஹவுஸ் (L. T. Hobhouse) என்பவர், நன்மை என்பதே உளதென்றும், தீமை என்ற தனியானதொன்றும் இலதென்றும் வாதித்துச் சாதித்திருக்கின்ருர். இவ்வாதங்களைத் தொடர்ந்திங்கு ஆராய்தல் இக்கட்டுரை உட்கொண்டிருக்கின்ற பொருளிற்கு அயலாகும். நன்மை என்பதே உளப்பாட்டு வகையில் உண்டென்று உரைக்கவல்ல நிச்சயமுடையதென்றும், விஷயங்களனைத்தும் ஒன்றையொன்று சார்ந்து இயங்குகின்ற இசையே அந்நன்மையெனப்படுவதாம் என்றும்,அந்த இசைவைஇயற்றிவைக்காமையைத் தீமை என்று அழைத்தால் அழைக்கலாமேயன்றி நன்மையினின்று வேறுபட்டுத் தன்னிலையில் அந்நன்மையை எதிர்த்து நிற்கின்ற தீமை என்பது ஒன்றும் இவ்வுலகில் இல்லையென்றும், ஆதலின்இவ்வுலகம் இருத்தற்கு இனியதென்றும், அவ்விசைவை உறுதிசெய்வதற்கு நாம் உரியவரென்றும், ஹாப்ஹவுஸ் உரைத்திருப்பவைகளை அலெக்ஸாண்டரின் முடிவினேடு சேர்த்துக்கொள்வோமாயின் இவர் கண்ட பொருளின்படி கடவுளின் சித்தத்தை நடத்திவைக்க நினைப்போர் இதயம் திட்பமடையும்.

இன்னவாறெலாம், மனச்சாக்ஷி தெளிவுறக் காட்டுகின்ற நன்மையை, ஐயமும் அச்சமும் இன்றி ஏற்றுக்கொண்டு மனிதர் வீரவாழ்க்கை நடத்துவதற்கு உதவியாக, நல்லுணர்வுடைய மேலோர் அவைகளின் தன்மைகளை அறிவுறுத்தவும், கலைநலங்கனிந்த புலமையோர் அவ்வறிவு வேண்டுமென்ற வோர் ஆசையைத் தூண்டவும், உதவுவாராகின்ருர்.

199207

# சூரியன்

## III. நக்ஷத்திரசாலை
## (அமைப்பும், நடைமுறையும்)

[122-வது பக்கத் தொடர்ச்சி]

*செஞ்ஞாயிற்றுச் செலவும் அஞ்ஞாயிற்றுப்*
*பரிப்பும், பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும்*
*வளிதிரிதரு திசையும்*
*வறிது நிலைஇய காயமும் என்றிவை*
*சென்றளந் தறிந்தோர் போல என்றும்*
*இனைத்தென் போரும் உளரே.*

—புறநானூறு.

மாக்களும், மக்களும்:—வானசாஸ்திரத் துறையில் ஈடுபட்டவர்களை, மக்கள் எனவும் மாக்கள் எனவுமிரண்டு பிரிவுகளாக வகுத்தார்கள், பழந்தமிழர்கள். நமது கல்லூரிகளில் கடிகாரத்தைப் பார்த்து 'ஒன்று,' 'இரண்டு', என்று மணியடிக்கும் வேலையாளும் இருக்கின்றான்; அண்டங்களின் அமைப்பையே கடிகாரமாகக் கொண்டு காணும் பேராசிரியரும் வீற்றிருக்கின்றார். வேலையாள் போன்றாரை, நாழிகைக் கணக்கர் என்றும், பேராசிரியர் போன்றாரைக் காலக் கணிதர் என்றும் வேறு பிரிக்கின்றார் இளங்கோவடிகள். நாழிகைக் கணக்கர்கள், மணியடிப்பார் போலவும், கிளிப்பிள்ளை போலப் பஞ்சாங்கம் ஒதுவாரைப் போலவும் ஆவர்.

*பூமென் கணையும் பொருசிலையுங் கைக்கொண்டு*
*காமன் திரியுங் கருவூர—யாமங்கள்*
*ஒன்றுபோய் ஒன்றுபோய் ஒன்றுபோய்நாழிகையுள்*
*ஒன்றுபோய் ஒன்றுபோ யொன்று*

என்று சிலர் நாழிகை யறிவிப்பார் என விளக்குகின்றார் அடியார்க்கு நல்லார். இவர்கள் வான சாஸ்திரிகள் அல்லர். இவர்களை மாக்கள் என்றே நப்பூதனார் இழித்துரைக்கின்றார்.

*பொழுதளந் தறியும் பொய்யா மாக்கள்*
*தொழுது காண்கையர் தோன்ற வாழ்த்தி*
*எறிநீர் வையகம் வெலீஇய செல்வோய்*
*குறுநீர்க் கன்னல் இனைத்தென் றிசைப்போர்*

என முல்லைப்பாட்டில் வருவது காண்க. நாழிகைக் கணக்கர்க்கும் காலக்கணிதருக்கும் உள்ள இவ்வேறுபாட்டை விளக்காமல், இவ்வடிகளில் வருவோரைக் காலக் கணிதராகவே கொண்டு, "மாக்கள் பொழுதளந்தறியும் பொய்யாக் காண்கையர்" எனக் கொண்டுகூட்டி, வாராத தலைநோயை வரச்செய்கின்றார் நச்சினார்க்கினியர். இவர்கள் மாக்களேயாய்க்கிடக்க, மக்களாவார், சூரியன் முதலியவற்றை நேரே சென்று கண்டுவந்தாற்போல, உண்மையை எடுத்துக் கூறிவிளக்கும் ஆராய்ச்சியாளரேயாம். அந்நாளைய அரசரோடு வீற்றிருக்கும் ஐம்பெருங்குழுவில், காலக்கணிதராம் பெருங்கணியும் ஒருவர். இவரை,

*ஆறிரு மதியினும் காருக வடிப்பயின்*
*றைந்து கேள்வியும் அமைந்தோன்.**

எனப்பாடுகின்றார் இளங்கோவடிகள். கோங்குவேள் கூறுவது போல, இம்மங்கலக்கணிகள் மாதிர நோக்கி, ஆராய்ச்சி செய்கின்றவர்கள். இவர்களது புகழைக் "கணிவன் முல்லை" என்ற துறையாக அந்த நாளையபுலவர்கள் பாடிவந்தனரெனப் புறப்பொருள் வெண்பாமாலையின்நின்று நாம் அறிகின்றோம். ஒவ்வொருவரும், ஒவ்வொரு துறையிலே சிறப்படைந்தால், அவர்கள் வாகைமாலைசூடி வெற்றிபெற்றவர்களே என்னத் தமிழர்கள் கருதிவந்தனர். பொருதுவந்த மேம்பாட்டை வாகை என்றும், இயல்பாக விளங்கும் மேம்பாட்டை முல்லை என்றும் வழங்குவது, அந்நாளைய மரபு. வாகைத்திணையிலே ஒரு துறையாகும் இக் கணிவன் முல்லை என்பது. இத்துறை, இப்பெயரோடு தொல்காப்பியத்திலே இல்லை. "அறிவன் வாகை" என்பதொரு துறை வருகின்றது. ஈதே கணிவன் முல்லை எனக்கூறும் இளம்பூரணர், இக்கணிகள், அறிவிற்சிறந்த மக்களாய் ஆராய்ச்சிசெய்துவந்த திறத்தைப் பரக்கப் பேசுகின்றார்.

"மறுவில் செய்தி மூவகைக் காலமும், நெறியின் ஆற்றிய அறிவன் தேயமும்" என்பது—மழையும் பனியும் வெயிலும் ஆகிய குற்றச்செயலையுடைய மூவகைக் காலத்தினையும் நெறியினாற் பொறித்த அறிவன் பக்கமும் என்றவாறு. இனி இறந்தகாலம் முதலாகிய மூன்று காலத்தினையும் நெறியிற் றேற்றிய அறிவன் என்றாலோவெனின், அது முழுதுணர்ந்தோர்க்கு அல்லது புலப்படாமையின், அது பொருளன் றென்க.

*பனியும் வெயிலும் கூதிரும் யாவும்*
*துனியில் கொள்கையொடு நோன்மை எய்திய*
*தணிவுற் றறிந்த கணிவன் முல்லை*

என்னப் பன்னிரு படலத்துள் ஓதுதலின்; ஆகவே மேலதே பொருளாகக் கொள்க. அறிவன் என்றது கணிவனை. மூவகைக் காலமும் நெறியினால் ஆற்றல் ஆவது, பகலும் இரவும் இடைவிடாமல் ஆகாயத்தைப் பார்த்து ஆண்டு நிகழும் வில்லும், மின்னும், ஊர்கோளும், தூமமும், மீன் வீழ்வும், கோணிலையுமழைநிலையும், பிறவும் பார்த்துக் கூறல் என்பதாம். அங்ஙனம்வேண்டுதலின், ஆற்றிய அறிவன்என்றார்"

இவ்வாறு இவ்வாராய்ச்சியாளர்கள் ஓரிடத்தே இருந்து, இடைவிடாமல் பார்த்துவந்தார்களாயின் அவ்விடமே நக்ஷத்திரசாலை யெனலாகும். எனவே நக்ஷத்திர சாலையே இவர்களை மாக்களாக்காமல் மக்கள் ஆக்கியது என்னலாம். பகலிலே நக்ஷத்திரங்கள் தோன்றாமையாலே, மிகமிக ஆழமாக இருக்கும் கிணற்றினுள் சென்று, அங்குச் சென்றதும், நக்ஷத்திரங்கள் தோன்றுவது கண்டு இவர்கள் ஆராய்ந்துவந்தனர் என்பது கர்ணபரம்பரைக் கதை.

**நக்ஷத்திர சாலைகள்:**—(Observatory) ஊனக் கண்கொண்டு காணமுடியாத நக்ஷத்திரங்களையும் கிரகங்களையும், கண்டு, அவற்றின் நிலையையும், இயல்பையும், உணரக்கூடிய இடமே நக்ஷத்திர சாலையாம். நோக்கரிய திருமேனியுடைய சூரியனை, நோவாமே நோக்கருள வல்லானைக் கண்டு களிக்கும் இடமே ஈதென்பதாயிற்று. நக்ஷத்திரசாலை என்பது அரசாங்கத்தார் ஆங்காங்குக் கட்டிவைத்திருக்கும் பெரிய கட்டடங்கள் மட்டும் அல்ல. வேண்டுமானால், நமது வீட்டு மேல்மாடியையும் நக்ஷத்திரசாலையாக அமைத்துவிடலாம். நமது வீட்டிலேயே நமக்கு வேண்டிய வசதிகளைச்செய்தமைத்துக்கொள்வது, எக்காலத்திலும் நமக்குச் சௌகரியமாகும். ஒவ்வொருவரும் தத்தம் சக்திக்குத் தக்கவாறு, தங்கள் தங்கள் இல்லத்தின் மேன்மாடியிலேயே ஒவ்வோர் நக்ஷத்திரசாலையை அமைத்துக்கொண்டு, பல இடங்களிலிருந்தும் வெளிவரும் ககோள ஆராய்ச்சி யுண்மைகளை நேரே கண்டறிந்து களிப்பது, தற்காலக் கல்விக்கும் தற்கால நாகரிகத்துக்கும் தக்கதே யாகும்; இக்காலத்திற்கு இன்றியமையாதது என்றும் கூறலாம்.

**பழைய சாலைகள்:**—ககோள ஆராய்ச்சிக்கென்றே ஒரு தனியிடத்தை அமைத்துக்கொண்டு, அங்கே அரிய ஆராய்ச்சிகளைச் செய்துவருவது, தொன்றுதொட்டுவரும் ஒரு சிறந்த பழக்கமாகும். சீனதேசத்தரசனாகிய 'யாஓ' (Yao) என்பவன் இற்றைக்குச் சுமார் 4200 வருடங்களுக்கு முன்னரே, கி. மு. 2300ல், சூரியன் பூமிக்குமேல் எவ்வளவு உயரத்திலே இருக்கின்றான் என்று கணக்கெடுப்பதற்காகக் கட்டடம் அமைத்து, அங்கே ஆராய்ச்சி செய்துவந்ததாக, அக்காலத்திய சீனதேசத்துச் சாசனங்கள் உணர்த்துகின்றன. ஹிப்பார்கஸ் (Hipparchus) என்ற யவனநாட்டறிஞரே, நக்ஷத்திரசாலை என்று சிறப்பித்துக் கூறத்தக்கதொன்றை முதல்முதலாக ஏற்படுத்தியவர் ஆவர். கி. மு. 140ல், ரோட்ஸ் (Rhodes) என்ற தீவிலே அதனை அமைத்த அப்பெரியார், அங்கேசெய்த ஆராய்ச்சியின்பயனாக ஒரு நக்ஷத்திர அகராதியையும் எழுதி வைத்துள்ளார். இதன்பின்னர், சுமார் 1000 வருஷங்களுக்கு முன்னர், கி. பி. 1000ல் காலீப்ஹகீம் (Caliph Hakim) என்ற இஸ்லாமிய சக்கரவர்த்தி டமாஸ்கஸிலும் (Damascus), பாக்டாடிலும் (Bagdad) மொக்கட்டாவிலும் (Mokatta), நக்ஷத்திரசாலைகள் அமைத்துச் சில ஆராய்ச்சிகளை மிக்க ஊக்கத்துடன் செய்துவந்தனர்.

**புதிய நக்ஷத்திரசாலைகள்:**—தற்கால ஐரோப்பிய நாகரிகக் கல்வி முறையின்படி அமைந்த நக்ஷத்திரசாலைகளில் முதன் முதலாகத் தோன்றியது, யுரேனிநகர் (Uranibourg) என்பதாகும். ஈது, கெப்ளர் (Kepler) என்றபேரறிஞருடன் ஒத்துழைத்துவந்த தானிய (Danish) வான சாஸ்திரியகிய டைகோ பிராகே (Tycho Brache) என்பவர் ஹுவீன் (Hveen) என்னும் தானியர் தீவிலே, கி. பி. 1676-ம்ஆண்டு, ஆகஸ்ட்டுமாதம் எட்டாம் தேதியில் நிறுவிய தொன்றாகும். இக்கட்டடத்திற்குக் கடைகால் போடும் போதே, இதற்கு யுரேனி நகர் என்றபெயர் வந்தது. ஒரு குடும்பம் வாழும் மாளிகையாகவே இதனைக் கட்ட எண்ணினர் என்பது, நகர் என்ற பெயரால் விளங்குகின்றது. கிரீக்கர்கள் கொண்டாடிய தும்புருகந்தருவ மாதான யுரேனியாவின் பெயரை இம்மாளிகைக்கு இட்டமையால், இம்மாளிகை நக்ஷத்திரசாலையாகவே நிலைபெற்று விளங்கவேண்டுமெனக் கால்கோள்விழாக் கொண்டாடும்போதே பிரார்த்தித்தார்கள் என்பது வெளியாகிறது. இதிலே இருபத்தொரு வருடம் வரையில் (1576—1597) சீரும் சிறப்புமாகப் பல அரிய பெரிய ஆராய்ச்சிகள் நடந்தேறிவந்தனவாம்.

**இந்திய நக்ஷத்திர சாலைகள்:**—இந்தியாவிலும் கி. மு. முதல்நூற்றாண்டில் விக்ரமாதித்தன் அரசுபுரிந்த காலத்தில் தன்னுடைய தலைநகராகிய உச்சினி நகரில் ஒரு நக்ஷத்திர சாலையை அழகுபெற அமைத்தான். அவனுக்குப் பின்னர் இற்றைக்கு இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர், ராஜா ஜேய் சிங் (Raja Jai Singh) என்பார், அதனைப் புதுப்பித்தனர். இவ் வரசர்பெருமான் கி. பி. 1705-ம் ஆண்டிலே ஐந்து நக்ஷத்திரசாலைகளை முறையே, டெல்லியிலும் (Delhi) காசியிலும் (Benares), வடமதுரையிலும் (Muttra), உச்சினியிலும் (Ujjain), ஜெய்பூரிலும் (Jaipur) கட்டிவைத்தார். உச்சினி நகரத்து நக்ஷத்திரசாலை அழிந்து போகாதபடி, அரசாங்கத்தார்கள் வேண்டிய ஏற்பாடுகள் செய்து காத்துவருகிறார்கள். அப்பழைய இடத்திலே இப்போதும் வானசாஸ்திர ஆராய்ச்சி நிகழ்கின்றது. தற்காலத்துடன் முற்காலத்தை ஒப்பிட்டுப் பார்க்கையில், அக்காலத்தவர்களுக்கிருந்த வசதிகள் மிகவும் குறைவு என்பது வெளியாகிறது. அப்படியிருந்தும் நமது நாட்டிலே இருந்தவர்கள் ககோள சாஸ்திரத்திலும் கணிதத்திலும் தலைசிறந்து விளங்கினார்கள் என்பதற்கு நமது பஞ்சாங்கமே நல்லதொருசான்றாகும். அவர்கள் எழுதிவைத்துப் போயுள்ள குறிப்புகள் இன்னும் பல்லாயிர வருஷங்களுக்குப் பயன்படும். பஞ்சாங்கத்தில் குறித்திருக்கும், கிரஹண காலம், ஸ்பரிச சமயம், மோட்சசமயம் (Time of occurrence and duration of eclipse) இன்னோரன்ன பல அரிய குறிப்புக்களை நாம் உற்று நோக்குந்தோறும் அவர்களுடைய கணித சாமர்த்தியமும், அறிவின் ஆழமும், ஆராய்ச்சியிலே அவர்கள் கொண்ட ஊக்கமும், நமக்குப் புத்துயிர்கொடுத்து நம்மைத் தலைநிமிர்ந்து நடக்கச்செய்கின்றன.

**இந்நாளைய சாலைகள்:**—தற்காலத்தில் நக்ஷத்திரசாலைகளை எல்லா நாட்டிலும் காணலாம். அமெரிக்காவில் உள்ளவற்றில் அருமைப்பாடமைந்த பல வானசாஸ்திர ஆராய்ச்சி யந்திரங்கள் மிகமிகப் பெரியனவாய் நின்று கண்டோரைத் திகைக்கச் செய்கின்றன. இவை தலைசிறந்தனவாக இருப்பதற் கேற்ப விலையுயர்ந்தனவாகவும் விளங்குகின்றன. சிகாகோவில் (Chicago) உள்ள தூரதிருஷ்டிக் கண்ணாடி வழியே, அண்டகோளங்கள் ஒவ்வொன்றையும் எத்தனையோ பன்மடங்கு பெரிய உருவம் உடையனவாகப் பெருக்கிக் காணலாம். நமது நாட்டிலும் சென்னை (Madras), பூனா (Poona), டேரா டூன் (Dehra Dun), கோடைக் கானல் (Kodaikanal), திருவனந்தபுரம் (Trivandram), முதலிய இடங்களில் நக்ஷத்திரசாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. நமது நாட்டிலுள்ள நக்ஷத்திரசாலைக் கருவிகளுக்கும், மேனாட்டிலுள்ள கருவிகளுக்குமுள்ள வேற்றுமையை நோக்குவோமாயின், இவைகளைச் சாதாரணமான மசூதிக்கும், அவைகளை டாஜ் மஹாலுக்கும் (Taj Mahal) ஒப்பிடலாம். ஆயினும், பொது இயல்பில் இவை இரண்டும் ஒரு தன்மையனவே.

**தூரதிருஷ்டிக் கண்ணாடியின் சரித்திரம்:**—நக்ஷத்திரக்காட்சிக்கென ஏற்பட்டுள்ள கருவிகள் பலப்பல. அவற்றுள் முதன்மையானது தூரதிருஷ்டிக் கண்ணாடியேயாகும். இதன் பெயரே கூறுவதுபோல, இக்கருவியானது தூரத்திலுள்ள பொருள்களை எளி

---

*ஆறிருமதி - 12 இராசி; காருகவடி - கிரகநிலை; ஐந்து கேள்வி - கிரக உச்ச நீச ஆட்சி நட்புப் பகை.

தில் தெளிவாகக் காணுவதற்கென ஏற்பட்ட ஒரு வகை திருஷ்டிக் (Optical) கருவியாகும் இக்கருவிக்கிந்தப்பெயரை முதல்முதல்கொடுத்தவர் இத்தாலிய தேசத்துக் கணித நூல் நிபுணரும் வான சாஸ்திரியுமான கலிலியோ என்பவரேயாவர். கி. பி. 16'2-ம் வருஷத்திலிருந்து இந்தப் பெயர் வழங்கிவருகிறது. கலிலியோ, தான் கண்டுபிடித்த இக்கருவியைக் கொண்டு அதி அற்புதக் காட்சிகளைக் கண்ணாரக் கண்டு களித்தார். வியாழத்தைச் (Jupiter) சுற்றி யோடும் உபக்கிரகங்களைக் (Satellites) கண்டார். பின்னர், சூரியமண்டலத்தி லுள்ள கரும் புள்ளிகளைக் கண்டார்; சுக்கிரனும் (Phsaes of Venus) சந்திரனைப் போலவே தேய்வதையும் வளர்வதையும் கண்டார். இவையே அல்லாமல், நமக்கு மிக அருகாமையில் இருக்கும் சந்திர மண்டலத்திலுள்ள மலை, பள்ளத்தாக்கு முதலியவைகளையும் கண்டு களித்தனர்.

அற்பத்தில் எழுந்த அற்புதம்:—சரித்திர முறையே ஆராயுங்காலையில், இவருக்குமுன்னர் கி.பி.1608-ம் வருஷத்திலேயே உலாந்தா (Holland) தேசத்திலே மூவர் இக்கருவியைக் கண்டுபிடித்த செய்தி, அரியதொரு கதையாக வழங்கிவருகிறது. உலாந்த நாட்டு வான சாஸ்திரியார் ஒருவர், தமதுவீட்டு மேல்மாடியில் ஏறி, காற்று வாங்கிக்கொண்டே உல்லாசமாக உலாவிக்கொண்டிருக்கும் சமயத்தில், தாம் உபயோகிக்கும் மூக்குக் கண்ணாடியை எடுத்து அதிலுள்ள தூசைத் துடைத்தார். அக்கண்ணாடி வில்லைகள் ஒன்றின்மேல் ஒன்று பொருந்துமாறு மடிக்கக்கூடியவை; வெவ்வேறு இயல்புடையன. அவற்றைத் துடைத்தெடுத்துச் சுத்தமாக இருக்கின்றனவா என்று வெளிச்சத்தில் தூக்கிப் பிடித்து ஒன்றின்பின் ஒன்றுகப் பார்த்தார். அவ்வாறு பார்க்கும்போது அதி தூரத்திலிருந்த கோபுரம்ஒன்று அருகே வந்துதோன்றியது. அக்கோபுரத்திலுள்ள ஒவ்வொரு சிறுசிறு பகுதியும்மிக நுட்பமாகவும் விளக்கமாகவும் அருகே வந்துதோன்றியது. இதனால் கண்ணாடி ஒளிவட்ட வில்லைகளைக் குறித்ததொரு முறையில் அடுக்கிப் பார்ப்போமானால், வெகு தூரத்திலுள்ள பொருள்களும் அவற்றின் நுட்பமான உறுப்புக்களும் வெகு சமீபத்தில் உள்ளனபோலத் திருஷ்டிகோசரமாகும் என்ற உண்மை வெளியாயிற்று. இவ்வில்லைகளை ஒரு குழலில் வைத்தால், தூரதிருஷ்டிக்குப் பயன்படும் என்றுகண்டதும், அவ்வாறேஅவற்றை உபயோகிக்கலாயினர். இவ்வாறு, கண்ணாடி துடைத்து நின்றவர் தூரதிருஷ்டிக் கண்ணாடியை எதிரே கண்டார். நம்முடைய பொருளுலகில் போல, அறிவுலகிலும் இவ்வாறு எதிர்பார்த்திராதபடி சில புதையல்கள் கிடைக்கின்றன. "கண்ணிலான் மாங்காய் விழவெறிந்த மாத்திரைக்கோ லொக்குமே ஆங்கால மாகும் அவர்க்கு." தண்ணீரைக் கொதிக்கவைத்திருந்த ஓர் அறிஞர், அந்நீராவி பொங்கி எழுந்து தண்ணீர்ப்பானையின் மேல்மூடியை மேலே தூக்கித் தள்ளக்கண்டவுடன் நீராவியால் ஓடும் புகைவண்டியைத் தன் கண்ணெதிரே கண்டாராம். இவ்வாறு அற்ப காரியங்களிலிருந்து அற்புதங்கள் பல வெளியாகின்றன.

ஒன்றை நினைக்கின் அதுவொழிந்திட் டொன்றாகும்
அன்றி யதுவரினும் வந்தெய்தும்—ஒன்றை
நினையாதமுன் வந்து நிற்பினும் நிற்கும்
எனையாளும் ஈசன் செயல். —நல்வழி.

# ஒத்தெல்லோ

## [Shakespeare's—"Othello"]

அங்கம் 1. களம் 3.

[103-ஆது பக்கத் தொடர்ச்சி]

[ஏவலாளர்களுடன் இயாகோவும் டெஸ்டிமோனாவும் வருகின்றனர்.]

நகரத்தலைவர்:—இந்தச் சரிதம் என் புதல்வியையுமே வசியம் செய்யுமென்றெண்ணுகின்றேன்[1].—நல்ல ப்ரபான்ஷியோ, சிதைந்தஇச்செய்தியைக் கூடியவரை செவ்விதாகக்கொள்[2]. தம் வெறும் கையினும் மனிதர் உடைந்த ஆயுதங்களை உபயோகித்துக்கொள்ளுவார்[3].

ப்ரபான்ஷியோ:—வேண்டிக்கொள்கின்றேன், அவளே பேசக் கேளுங்கள். காதல் வேண்டியவரிற் பாதி தானே யாயினளென்பதை அவள் ஒப்புக்கொள்வாளாயின், பின், நான் சாட்டும் கெட்ட இப்பழி இம் மனிதன்மீது இறங்குமாயின், என் தலையில் அழிவு விழுக[4]—இங்கு வா, சாதுப் பெருமகளே; இப்பெருந்தகைக் கூட்டத்திலெல்லாம், நின் பணிவுடைக் கீழ்ப்படிவுமிகுந்து செலுத்தவேண்டிய இடத்தைக் காண்கின்றாயோ நீ?[5].

டெஸ்டிமோனா:—எனது பெருந்தகைத் தந்தாய், வேறுபட்ட கடமையே இங்கு நான் காண்கின்றேன். என் பிறப்பிற்கும் வளர்ப்பிற்கும் உனக்கு நான் கடமைப்பட்டுளேன்; என் பிறப்பு வளர்ப்பு இரண்டும் உன்னை யான் எங்ஙனம் கௌரவப்படுத்த வேண்டுமென்று எனக்குக் கற்பிக்கின்றன—எனது கடமைக்கு எசமானன் நீ. இதுகாறும் நானும் நின் மகள்; மற்று, இங்குளர் என் கணவர்; என்னுடை அன்னை, தன் தந்தையினும் நின்னை மேலாகமதித்து உனக்குக் காட்டிய கடமை எவ்வளவோ அவ்வளவு என் தலைவர் இம்மூரருக்கு உரியதென்று யான் ஒப்புக் கொள்ளலாமென்ன வாதித்து வற்புறுத்துகின்றேன்.[6]

ப்ரபா:—கடவுள் நின்திறம் இருப்பாராக—நான் முடித்துவிட்டேன்—பிரபுவிற்கு இஷ்டமுண்டானல் துரைத்தனக்காரியத்தின்மேற் செல்லலாம்[7]. இங்கு வா, மூரனே; முன்னரே உன்னுடையது ஆகிவிட்டதென்பதன்றி, நின்னின்று விலக்கிவைக்கவே என் முழு இதயத்தோடும் விரும்பும் அதனை நினக்குயான் இங்கு என் முழு இருதயத்தோடும்அளிக்கின்றேன்[8]— உன்பொருட்டு அருங்கலமே, எனக்கு வேறு மகவு இல்லையென்று எனது ஆன்மாவில் உவக்கின்றேன். ஏனெனில், நினது இவ்வோட்டம் அவர்கள்மீது முட்டிக்கட்டைத் தொங்கவிட எனக்குக் கொடுமையைக் கற்றுத்தரும்[9]— பிரபுவே, முடித்துவிட்டேன்.

தலைவர்:-நும்மைப்போன்றே பேசி நானும்ஒருவாசகம் வைத்திடுவேன்[10]; அது, இக்காதலர்கள் நும்தயையினுள் சேர்வதற்கு ஓர் சாரம் அல்லது படியாக உதவலாம்[11]. சிகிச்சைகளைக் கடந்துவிட்டபோது, நேரக்கூடியகேடெல்லாம் நேரக்கண்டபின், அதுகாறும் நம்பிக்கையைப்பற்றித் தொங்கிக்கொண்டிருந்த துயரங்கள் முடிந்துவிடுகின்றன[12]. கடந்துசென்ற ஒரு தீங்கைக் குறித்துத்துக்கப்படுவது, புதியதோர் தீங்கை மேலிழுத்துப் போட்டுக்கொள்வதற்கு அடுத்த வழி

(1) ஒத்தெல்லோ சொன்னவைகளைக் கேட்டு வியந்த நகரத்தலைவர், அதனைத் தன்மகள் கேட்டிருப்பாளாயின் அவளும் அவனுக்கு வயப்பட்டிருப்பாள் எனப் பகர்கின்றார். ஆதலின், டெஸ்டிமோனா அவனைக் காதலிக்க நேர்ந்தது தக்கதே யென்றும், இதனில் மருந்து மாயம் ஒன்றுமே இருக்கவேண்டிய அவசியம் இல்லையென்றும் தாம் கொள்கின்ற கருத்தை இதனால் தெரிவிக்கின்றார்.

(2) நீ நம்பியிருந்ததற்குமாறாகடெஸ்டிமோனா உன்னை வஞ்சித்து ஒத்தெல்லோவை மணந்ததால், நீ அவள்பால் வைத்திருந்த நம்பிக்கையும்நேயமும் சிதைந்துபோயிருக்குமாயினும், அதுபற்றி நீ அவளை அறவேதுறந்துவிடலாகாது. கூடியவரையில்இந்நிலையை ஏற்றுக்கொண்டு, இன்னமும் அந்நேயம் கெடாமல் காப்பதே நலம்.

(3) போர் செய்வோன், தன் கை ஆயுதம் உடைந்ததென்று அதனை எறிந்துவிட்டு வெறுங் கையுடன் போர் புரிவது நன்றன்று. வெறுங்கையைக்காட்டிலும் உடைந்த ஆயுதத்தைஉபயோகித்துக்கொள்வதேபுத்திசாலித்தனம் அவ்வாறே, டெஸ்டிமோனாவின் அன்பை முற்றிலும் இழந்துவிடாமல், மகளொருத்தி இருக்கின்றாள்என்ற அளவிலாவது அவளை ஏற்றுக்கொள்வதே உனக்கு நல்லது.

(4) ஒத்தெல்லோ சொல்லியபடி, இவளும் அவனைக் காதலித்து, அவன்தன்மீது காதல்கொள்ளும்படி தானே தூண்டினள் என்பதை ஒப்புக்கொள்வாளாயின், பிறகு நான் அவன்மீது குற்றங்கூறமாட்டேன்.

காதல் வேண்டியவரிற் பாதி தானே யாயினள்—இருவர் கொள்கின்ற காதலில் ஒவ்வொரு பாதி ஒவ்வொருவருக்கும் உண்டு. அவ்வாறின்றி இங்கு ஒத்தெல்லோ மாத்திரமே இவளை ஆசைப்பட்டு, அவள் காதல்வைக்காமல் இருந்தும், மந்திரம் முதலியவைகளால் அவளை வஞ்சித்துவிட்டான், என்று நான் கருதுகின்றேன். மற்று, ஒத்தெல்லோ சொல்கின்றபடி, இவளும் அவனைக் காதலித்து, அவனுடைய காதலை வேண்டியும்இருப்பாளாயின், பிறகு இவன்பால் யாதும் பழியில்லை.

"தன்னைக்காதலித்த நண்பன் ஒருவன் எனக்கிருப்பானாயின், என்னுடையகதையை எவ்வாறு சொல்வதென்று அவனுக்குக் கற்பித்தால் போதும்" என்பதுபோன்ற வகையில் டெஸ்டிமோனா, இக்காதலின் தன் பாதியைக் காட்டியிருக்கின்றாள்.

(5) இங்கு இருப்பவர்களிலெல்லாம் யாருக்கு நீ அதிகம் கீழ்ப்படிய வேண்டுமென்பது தெரிகின்றதா ?

(6) 'யாருக்கு உரியது உன் கடமை', என்று கேட்ட தன் தந்தைக்கு டெஸ்டிமோனா அளிக்கின்ற இவ்விடை மிக்க திறமை வாய்ந்தது. "உனக்கும் உரியது, என் கணவனாகிய இவ்வொத்தெல்லோவிற்கும் உரியது. ஆயினும், என் அன்னை தன் தந்தையிலும் உனக்கே அதிகம் கடமை செலுத்தியது போன்றே நானும் இவனுக்கு நின்னினும் அதிகம் கடமைப்பட்டவளா யிருக்கின்றேன்".

(7) கடவுள் நின்திறம் இருப்பாராக, என்றது முற்றிலும் மனமுவந்துவாழ்த்திய வாழ்த்தென்று எண்ண இடமில்லை. "என்னை வஞ்சித்தது மன்றி இப்படித் துணிந்தும் பேசுகின்ற உன்னைக் கடவுள்தான் காக்கவேண்டும். இல்லையேல் என்மனத்தைப் புண்படுத்திய இது வீண்போகாது" என்னுங் குறிப்பு இதனுள் அடங்கியிருப்பது பின் இவன் பேசும் சில வாசகங்களிலிருந்து தெரியவருகிறது.

நான் முடித்துவிட்டேன்—நான் கொணர்ந்த வழக்கு இதனோடு முடிந்துவிட்டது. பிறபுவிற்கு...செல்லலாம்—இது நகரத்தலைவரை நோக்கிச் சொன்னது. என் வழக்கு முடிந்துவிட்டபடியால், இனி நீங்கள்உங்கள் கருத்தைஅரசியல் சம்பந்தமான விஷயங்களில் செலுத்தலாம்.

(8) அதனை என்பெண்ணை. உனக்கு நான் என்மகளை ஒருபோதும் மனப்பூர்வமாய்க் கொடுத்திருக்கமாட்டேன். ஆயினும், முன்னரே உன்னுடையவளாய்விட்டாளாதலால், வேறு வழியின்றி, மனப்பூர்வமாய் இப்பொழுது கொடுக்கிறேன்—என்று தன் வெறுப்பைக் காட்டிப் பரிகசம் செய்கின்றான்.

(9) உன்பொருட்டு— உன் விஷயத்தில் எனக்கு உண்டான இவ்வனுபவம் காரணமாக. முட்டிக்கட்டை - மாடுகள் ஓடிவிடாமல் காலில் கட்டும் கட்டை.

எனக்கு வேறு மக்கள் இல்லாமையே நலமாயிற்று. நீ இவ்வாறு நெறிகடந்து ஓடிய அனுபவத்தால், நான் அவர்களுக்குக்கொடுமைசெய்து, சுதந்தரம் கொடுக்காமல்அவர்களைக்கட்டுப்பாட்டிற்குள்வைத்திருக்கவேண்டியிருக்கும்.

அருங்கலம் = அருமையான ஆபரணம் போன்றவள். முன், 'சாதுப்பெருமகளே' என்றதுபோல், இங்கு 'அருங்கலமே' என்பதும் இழிவுக் குறிப்புடைய பரிகசம்.

(10) நீர்பேசியதுபோலவே நானும் அனுபவரீதியாய்ப் பொருள்பொதிந்த வாசகங்கள் இப்பொழுது பேசப்போகின்றேன்—என்று இளம்பரிகசம்தோன்றக்கூறுகிறான்.

(11) அது - அவ்வாசகம், அதனை நீர் உட்கொண்டால் இக்காதலர் உமது தயைக்குப் பாத்திரராகலாம்.

(12) நேருமோ என்று அஞ்சுகின்ற ஒரு ஆபத்தானது நேராதபடி சிகிச்சைகள் தேடி அச்சிகிச்சைகளால் அவ்வாபத்து நேராமற்போனாலும் போகலாம் என்ற நம்பிக்கை இருக்கும்வரையிற்றான், அச்சத்திற்கும் துன்பத்திற்கும் இடமுண்டு. சிகிச்சைகள் பயனிலவாகிக் காரியம் கைகடந்து போனபின் நேரக்கூடிய தீங்கெல்லாம் நேரக்கண்டவுடன், அப்புறம் அச்சமாகிய துன்பம் முடிந்து ஒரு பெரும் பாரம் தீர்ந்தவன்போ லாகலாம்—என்பது பொருள். டெஸ்டிமோனா கலியாணம் செய்துகொண்டுவிட்டாள், இனி அதைத் தடுப்பதற்கில்லை ஆகையால் வருந்துவதால் என்னபயன்—என்கின்றான்.

(13) சென்றது கருதி வருந்துவதெல்லாம் புதுப்புதுத் தீங்கிற்கு வழிதேடிக்கொண்டதாய் முடியும்.

(14) விதியை வெல்ல ஒருவராலும் இயலாது; அது நம்மிடத்திலிருந்து ஒன்றினை எடுத்துக்கொள்ளும்போது அவ்விழவினால் நாம் வருந்தவேண்டுமென்று எதிர்பார்க்கின்றது. இவ்வருத்தந்தான் அவ்விதி நமக்குச் செய்யக்கூடிய கெடுதி. பொருளை இழக்காமல் காப்பது நம்கையில்இல்லையாயினும், அவ்விழவுபற்றி வருந்துவதும் வருந்தாதிருப்பதும் நம்முடைய மனத்திட்பத்தைச்சார்ந்ததொன்றே. அவ்விழவுபற்றி வருந்தாமல் நாம் பொறுத்துக்

யாகின்றது [13]. தாங்க இயலாததை விதியே எடுத்துக் கொள்கின்றபோது, பொறுமையே அதன் கெடுதியை ப்பரிகசமாக்கிவிடும் [14]. கொள்ளை கொடுத்தான் சிரிப்பவனொருவன், கள்வனிடத்திலிருந்து தானே சில கவர்கின்றான் [15]. மற்று, பயனற்ற துயரத்தைச் செல வழிப்பவன் தன்னைத்தானே கொள்ளையடித்துக்கொண்டவனாகின்றான் [16].

ப்ரபா:—அப்படியே, துருக்கரும் ஸைப்ரஸ்ஸை நம்மிடத்திலிருந்து வஞ்சித்துக்கொள்ளட்டும்; நம்மால் சிரிக்கக்கூடிய வரையில் நாம் அதனை இழந்ததில்லை [17]. இவ்வாசகத்தினின்று, தான் கேட்கின்ற இலவச ஆறுதல் தவிர வேறொன்றுந் தாங்காதவன் அதனை நன்கு தாங்குவான் [18]; மற்று, துயரத்திற்குச்செலுத்தும்படி ஏழைப் பொறுமையினின்று கடன் வாங்க வேண்டியவனோ, வாசகம் வருத்தம் இரண்டையும் தாங்குவானாகின்றான் [19]. இவ்வாக்கியங்கள் தித்திப்பிற்கும் பித்தத்திற்கும் இருபக்கமும் பலமாகி இருபொருட் சந்தேகத்திற்கிடந்தருவன [20]. மற்று, வார்த்தைகள் வார்த்தைகளே; புண்பட்ட இதயம், காதின்வழியாய்த் தைக்கப்பட்டதென்பது நானிதுகாறுங் கேட்டதில்லை [21]. அரசியல் காரியங்களுக்கு இனிச் செல்லும்படி நான் தாழ்மையுடன் உம்மை வேண்டிக்கொள்கின்றேன்.

தலைவர்:—மிக்பெரிய பிரயத்தனத்தோடு துருக்கன் ஸைப்ரஸ்ஸைக் கருதிச்செல்கின்றான்—ஒத்தெல்லோ, அவ்விடத்தின் வலிமை உனக்கே நன்கு தெரியும். உனக்குப் பதிலாக அங்கு நாம் வைத்திருப்பவர் நன்கு ஒவ்விய தகுதியுடையவராயினும், நிகழ்ச்சிகளின் முடிவினது தனி அரசியாம் அபிப்பிராயமானது அதிகமும் சாக்கிரதையான குரலை நின்மீதெறிகின்றது. [22] ஆதலின், நீ உனது புதிய அதிர்ஷ்டத்தின் மெருகை, அதனினும் முரடான இவ் வாரவாரமுடைய படையெழுச்சியால் மழுக்க இணங்கித் திருப்தி யடையவேண்டும். [23]

கொண்டிருந்து விடுவோமானால், பின் "ஏ விதியே, அப்பொருளை நான் இழக்கும்படி செய்தாயாயினும், அதனால் எனக்கு நீ புரிய நினைத்த கெடுதி என்னைச் சாரவில்லை காண்" என்றுஅவ்விதியைப்பரிகசித்து நாமே வென்றவர்களாய் நிற்போம் - என்பது பொருள்.

(15) கொள்ளைகொடுத்தவன் ஒருவன் அதுபற்றி வருந்தாமல் சிரிப்பானாயின், திருடனுக்குப் பொருள்மாத்திரம் கிடைத்ததே யொழிய, அதனை யிழந்தவன் படுகின்றதுயரத்தைப் பார்த்து ஜயகோஷம் செய்கின்ற களிப்பு வாய்க்காதாகையால், திருடனிடத்தினின்றும் இக்களிப்பைத் தானே கவர்ந்துகொட்டுவிட்டானென்று கூறலாம்.

(16) வீண் துயரம் பாராட்டுபவன், தன்மன அமைதியைத் தானே இழப்பித்துக்கொண்டவனாகின்றான்.

(17) அப்படியானால், துருக்கர் ஸைப்ரஸ்தீவை எடுத்துக்கொள்ளும்படி விட்டுவிட்டு நாம் சும்மா விருக்கலாமே. ஸைப்ரஸ் போய்விட்டதே என்றுசிரிப்போம், அதனை இழந்த நஷ்டமும் நமக்குத் தோன்றாது—என்று, ப்ரபான்ஷியோ, தலைவர் கூறிய அறிவுரை வாசகங்கள் காரியத்தளவில் எத்துணைப் பைத்தியகாரத்தனமாக முடிகின்றதென்பதைக் காட்டிப் பரிகசிக்கின்றான்.

(18) வாசகம் என்பது இங்கு, வருத்தமடைந்தவனுக்குப் பிறர் ஆறுதலாகக்கூறும் வார்த்தைகளைக் குறிக்கின்றது. அதனை = அவ்வாசகத்தை. இலவச ஆறுதல் - விலையின்றித் தாராளமாகக்கொடுக்கும் ஆறுதல் மொழிகள். தாங்காதவன் - அனுபவிக்காதவன்; தாங்குவான் - பொறுப்பான். ஆறுதல்மொழிகள் கூறிப் பிறரைத் தேற்றப் புகுபவர், 'இவ்வளவு நன்றாகப் பேசி, இத்தனை வார்த்தைகளைக் கொடுத்தோமே' என்று தாமே திருப்தியடைவதல்லாமல், துன்பப்பட்டிருப்பவனுக்கோ அதனால் யாதும் பயன் இல்லை—என்பது பொருள்.

(19) துன்பப்பட்டவன், ஆறுதல் மொழிகளால் பயன் பெறாததுடன், அவைகளைக் கேட்பதால் பின்னும் மனமுளைவான். துன்பத்தோடு இம்மொழிகளையும் சுமக்க வேண்டிய பாரத்தால் வருத்தம் இருமடங்காகும்.

பொறுமையைக் கையாண்டு துயரத்தைத் தணிக்க முயல்வது வீண். துயரம் என்னும் கொடியோன் தனக்குரிய கடமையை நம்மிடத்தினின்று இறுக்க வரும்போது, பொறுமையினிடத்திலிருந்து கடன் வாங்கிச் செலுத்துவோமானால், கடன்காரராவது தவிர, அக்கொடியோன் ஆட்சியினின்று தப்பமுடியாது—என்பது இவ் வாக்கியத்தில் அடங்கிய உருவகக் கருத்து.

(20) ஆறுதல் மொழிகள், சொல்பவனுக்குத் தித்திப்பாகவும் கேட்பவனுக்குக் கைப்பாகவுப் பொருள் தெளிவின்றியும் இருக்கும்—என்பது பொருள்.

(21) வார்த்தைகள் வெறும் வார்த்தைகளே. வருத்தப்பட்டவர் ஒருவரும், பிறர் கூறும் ஆறுதல் மொழிகளைக் கேட்டுத் துன்பம் தணியமாட்டார்—என்பது பொருள்.

(22) ஸைப்ரஸ்ஸில் உனக்குப் பதிலாக இருப்பவர் நல்ல திறமைசாலியாயினும், இந்த யுத்தத்திற்கு உன்னை அனுப்புவதே தக்கதென்று எல்லாரும் அபிப்பிராயப்படுகின்றனர்—என்பது கருத்து.

அபிப்பிராயமானது.........எறிகின்றது-உன்னை அனுப்புவதே சாக்கிரதை யென்று எல்லாரும் உன்னைக் குறித்துக் குறித்துப் பேசுகின்றனர்.

நிகழ்ச்சி......அபிப்பிராயம் = அரசியல் நிகழ்ச்சிகளின் ஆட்சி அபிப்பிராயத்தின் கையில் இருக்கின்றது. அபிப்பிராயப் பட்டபடியே அந்நிகழ்ச்சி முடியவும் முடிகின்றது.

(23) புதிய அதிர்ஷ்டம் - டெஸ்டிமோனாவை மணஞ்செய்துகொண்டது. மெருகு - பளபளப்பு, இங்கு உவகையின் பொலிவு. அதனினும் - அவ்வதிர்ஷ்டத்தினும். மழுக்க - மங்கச் செய்ய.

மெருகை......படை யெழுச்சியால்......மழுக்க இணங்கித் திருப்தியடைய வேண்டும்—என்று முடித்துக்கொள்க.

நீ புதுமணங்கொண்ட இன்பத்திற்கு இடையூறுநேர்கின்றதாயினும், இப் போர்மேற் செல்ல இசையவேண்டும் - என்பது கருத்து.



# கம்பராமாயணம்

## கிஷ்கிந்தா காண்டம்—9. கார்காலப் படலம்

[124-வது பக்கத் தொடர்ச்சி]

கம்பரும் நண்டும் கதவடை கோண்டார்.

**கா**ர்ப்பருவ வருகையினை வாயாரவருணித்த கம்பர் அதன் செலவினைச் செப்பாதிருத்தல் சீரிதன்றெனுஞ் சிந்தையராய் இனிப் பாசுரங்கள் பதினேழு பாங்குறப் பாடுகின்றார். முன், வஞ்சனை யரக்கர்தம் வடிவின் செய்கையின் நெஞ்சினின் இருண்டமேகம், மாரிக்காலங்கழிந்தபின் வெளுத்த ஓர் தன்மையை முதலில்,

மள்கலில் பெருங்கொடை மருவி மண்ணுளோர்
உள்கிய பொருளெலா முதவி யற்றபோ
தெள்கலி லிரவலர்க் கீவ தின்மையால்
வெள்கிய மாந்தரின் வெளுத்த மேகமே

[குறையாத பெருங்கொடையை மேற்கொண்டு, உலகிலுள்ளவர் வேண்டிய பொருள்களை யெல்லாங் கொடுத்து, தம்மிடத்தில் இனிக் கொடுப்பதற்குப் பொருள் இல்லாதபோது, இகழப்படாத யாசகர்களுக்குக் கொடுக்கமாட்டாமையால் வெட்கமடைகிற மனிதரைப்போல மேகங்கள் வெளுத்துப்போயின]

எனக்காட்டித் துவக்குகின்றார். உள்ளி உள்ளவெல்லாம் உவந்து ஈயும் வள்ளியோர்க்கு நிகராக மேகம் கம்பரால் முன்னொருகால் வருணிக்கப்பட்டது. வள்ளலார்தம் கொடையின் திறத்தை அங்குக் குறித்த கம்பர், அக்கொடை யியலாக்கால் அவர் எய்தும்நிலையை இங்கு இயம்புகின்றார். "இசையா வொருபொருள் இல்லென்றல் வசையன்று வையத்தியற்கை" என்பதனைய பழமொழிகளிலும் உலக இயற்கையிலும் தஞ்சம் புகுந்து தம் நெஞ்சினை ஆற்றிக்கொள்வது அவர்களுக்கு இயல்வதொன்றன்று. "சாதலின் இன்னாதது இல்லை இனிது அதூஉம் ஈதல் இயையாக்கடை" என்ற பொய்யாமொழிக் கிணங்கி, பேசரிய பெரும்பிழை தாமே செய்தார்போல வெள்கி வெள்கி, மானமாம் உயிரிழந்து மாண்டவர்க்கு நிகராக விளர்த்து நிற்பார். 'வையத்து இயற்கை' என்று வாளாவிருத்தல் பெரியோர்க் குரியதன்று, யாருக்கு மழகன்று. கொடுக்குங் கிளர்ச்சியேபோல் கொடுக்கமாட்டா வெறுப்பினும் பொதுவறநிற்பதே மேன்மையாதலின் இம்மேகம் அச்செய்தியைத் தன்பால் காட்டிற்று.

கார்காலத்தில் உலகத்தைக் கதுவியிருந்த இருள் கழிந்ததோர் நிலையை இனிக் கம்பர் பேசுகின்றார்:—

தீவினை நல்வினை யென்னத் தேற்றிய
பேர்வினைப் பொருடனை யறிந்து பெற்றதோ
ராய்வினை மெய்யுணர் வணுக வாசறு
மாயையின் மாய்ந்தது மாரிப் பேரிருள்

[தீவினை நல்வினை என்று விளக்கப்பட்டிருக்கின்ற பெரியகருமங்களின் விஷயங்களை அறிந்து அடைந்த ஒப்பற்ற ஆராய்ச்சித் தொழிலை மேற்கொண்ட மெய்யுணர்வான தநெருங்கியவுடன், பற்று அற்றுப் போகின்ற மாயையைப் போல, மாரிக்காலத்துப் பேரிருள் மாய்ந்துபோயிற்று]

மெய்யுணர்வெய்தி மாயை நீங்கியதெனின், பின், இகலும் போரும் எவ்விடத்துங் காணற்கில்லை யாதலின்,

மூளமர் தொலைவுற முரச வித்தபோற்
கோளமை கோண்முகில் குமுற லோவின
நீளடு கணையெனத் துளியு நீங்கின
வாளுறை யுற்றென மறைந்த மின்னெலாம்

[மூள்கின்ற யுத்தம் தொலையும்படி முரசின் முழக்கம் ஒடுங்கியதுபோல, நீர்கொண்டிருந்த தன்மை நீங்கிய வலிய மேகங்கள் குமுறாது ஒழிந்தன. நீண்ட போர்செய்கின்ற அம்புகள் போன்ற மழைத்துளிகளும் ஒழிந்தன. வாளாயுதங்கள் உறையுள் சேர்ந்ததுபோல் மின்னல்களெல்லாம் மறைந்தன]

என்கின்றார். ஈதற்குப் பொருளிலதாயினும் ஆகுக, ஈயாமையன்ன இழிவில்லை என்னும் நாணம் இயையுமாயின் உலகத்தின் இருள் நீங்கிப் போராட்டமில்லாப் பெருநலம் வாய்க்குமென்னும் அரியநினைவினை இம்மூன்று பாசுரங்களும் எழுப்பித் தருகின்றன. இஃதனையநினைவெனும் நலத்தினை நம்மனத்தகத்தே நிழ்த்துவதற் கல்லாமல் புலவர்மற்று எற்றுக்குளர். இதன்மேல்,

தடுத்ததா ணெடுந்தடங் கிரிக டாழ்வரை
அடுத்தநீ ரொழிந்தன வருவி தாங்கின
எடுத்தநூ லுத்தரி யத்தொ டெய்திநின்
றுடுத்தவா ணிறத்துகி லொழிந்த போலுமே

[பெருகுகின்ற நீரைத் தடுத்துக்கொண்ட அடிவாரங்களையுடைய உயர்ந்த பெரிய மலைகள்—அடிவாரத்தைச் சார்ந்திருந்தவெள்ளம் நீங்கினவாகி அருவிகள்மாத்திரமே தணிந்து பெருகப்பெற்றனவாயின. அதனால் அவை, அணிந்த பூணூலாகிய உத்தரீயத்துடன் பொருந்தி நின்று, அரையில் உடுத்திருந்த வெண்ணிறமான ஆடை நீங்கியவற்றைப் போன்றிருக்கும்]

என்னக் காட்டிப் பின், ஆறுகளின் நிலைமையையுந் தோற்றத்தையும்,

மேகமா மலைகளின் புறத்து வீதலான்
மாகயா றியாவையும் வாரி யற்றன
வாகையாற் றகவிழந் தழிவி னன்பொருள்
போகவா றொழுகலான் செல்வம் போன்றவே.

[பெரிய மலைகளின் மேலிடத்தைவிட்டு மேகங்கள் நீங்கிவிட்டபடியால், திக்குக்களை அளாவிப் பாய்ந்த ஆறுகள் எல்லாம் நீர் அற்றுப்போயின; ஆதலால், நடுநிலைமை நீங்கித் தன் அழிவைத் தேடிக்கொள்கின்ற ஒருவனது பொருள் போய்விட அதன்மேல் நன்னெறி ஒழுகமாட்டாதவனது செல்வத்தைப் போன்றன]

என்று கூறிக்காட்டுகிறார். இதுகாறும் மறைந்திருந்த சந்திரன் இனி வெளித்தோன்றுகின்றது:—

கடந்திறந் தெழுகளி றனைய கார்முகில்
இடந்திறந் தேகலிற் பொலிந்த இந்துவும்
நடந்திற னவில்வுறு நங்கை மார்முகம்
படந்திறந் துருவலிற் பொலியும் பான்மைபோல்

[மதநீர் பாயுந் துவாரங்களைத் திறந்துகொண்டு எழுகின்ற ஆண் யானைகளைப் போன்ற கருமேகங்கள், தாம் கவித்திருந்த இடத்தைத் திறந்துவிட்டுவிட்டுச் சென்றதனால், திரைச்சீலையை உருவித்திறக்க, பலவகை நாட்டியத்தை ஆடிக்காட்டுகின்ற மாதர்களின் முகம் தெரிந்து பொலிவதுபோல் சந்திரனும் பொலிந்தது]

என இனிதின் வருணித்தார். இப்பொழுது எழுந்த வாடைக்காற்றோ வெனின்,

பாசிழை மடந்தையர் பகட்டு வெம்முலை
பூசிய சந்தனம் புழுகு குங்குமம்
மூசின முயங்குசே றுலர மொண்டுற
வீசிய நறும் பொடி விண்டு வாடையே

[பசிய ஆபரணங்களையணிந்த மாதர்களின் பகட்டுடைய கொடிய முலைகளில் பூசிய, சந்தனமும் கஸ்தூரியும் குங்குமமும் கலந்த குழைந்த சேறுனது உலரும்படி வாடைக்காற்றுனது, நல்ல மணமுள்ள மகரந்தப்பொடிகளை மலர்களினின்று வெளிப்படுத்தி மிகுதியாக வீசியது]

மாதரார் முலைதிமிர்ந்த களபச்சேறு இனிது இங்ஙனம் புலர்த்தப் பெறுமாயின், இராவணன் சிறையில் இன்னலாம் அளறு வீழ்ந்து புலர்கின்ற அந்தச் சீதையின் கதி யாதாவதென நையவேண்டா.

மன்னவன் றலைமகன் வருத்த மாற்றுவா
னந்நெறிப் பருவம்வந் தணுகிற் றுதலாற்
பொன்னினை நாடிய போது மென்பபோல்
அன்னமுந் திசைதிசை யகன்ற விண்ணின்வாய்

[தயரதமன்னவனது மூத்தகுமாரனுகிய இராமனது வருத்தத்தைத் தீர்ப்பதற்குரிய பருவம் முறையே வந்துவிட்டமையால், சீதையைத் தேடும்பொருட்டுப் போவோமென்று புறப்பட்டனபோல், அன்னப்பறவைகளும் ஆகாயத்தில் திக்குக்கள்தோறுஞ் சென்றன]

ஆகாயத்தில் அன்னங்கள் பறக்க, கீழே நீர்நிலைகளில் மீன்கள் புரள்கின்றன:—

வஞ்சனைத் தீவினை மறந்த மாதவர்
நெஞ்செனத் தெளிந்தன நீர நீர்தொறும்
பஞ்செனச் சிவக்கும் பாதப் பேதையர்
அஞ்சனக் கண்ணெனப் பிறழ்ந்த வாடன்மீன்

[வஞ்சனையுடைய பாவங்களை மறந்த பெருந் தவசிகளினுடைய மனம்போல, நீர்நிலைகள் தெளிவடைந்தன. அந் நீரிலெல்லாம், விளையாடும் மீன்கள், பஞ்சின்மேல் நடக்கவேண்டுமென்று சொன்னலும் சொன்ன அளவிலேயே நன்றிச் சிவந்துவிடுகின்ற மெல்லிய பாதங்களையுடைய மாதர்களின் மையிட்ட கண்களைப்போலப் புரண்டன]

வஞ்சனை மறந்த மாதவத்தோர்தம் தெளிந்த மனத்தினில் மாதர் கண்கள் புரளலாம் போலும்; அதனலம்மனம் மாசுறுமென்ற அச்சமொன்றும் வேண்டா. மீன்களேயன்றி நீரில் செந்தாமரையும் செங்கிடையும் இருந்தன. அவை,

ஊடிய மடந்தையர் வதன மொத்தன
தாடொக மலர்ந்தன முதிர்ந்த தாமரை
கூடினர் துவரிதழ்க் கோலங் கொண்டன
சேடுறு நறுமுகை விரிந்த செங்கிடை

[தண்டில் பொருந்த மலர்ந்து முதிர்ந்த தாமரை மலர்கள், ஊடல்கொண்ட மாதரது முகம்போல் சிவந்து ஒருபுறம் சாய்ந்திருந்தன. அழகு மிக்க நறுமணம் உள்ள அரும்புகள் மலர்ந்த சிவப்பு செட்டிச்செடிகள், தலைவரோடு கலவி செய்த மாதர்தம் பவளம்போன்ற உதடுகளின் அழகைக் கொண்டன]

இவைகளுக்கிடையே கம்பர் தவளைகளின் தன்மையையும் மறக்கவில்லை.

கல்வியிற் றிகழ்கணக் காயர் கம்பலைப்
பல்விதச் சிறாரெனப் பகர்வ பல்லரி
செல்லிடத் தல்லதொன் றுரைத்தல் செய்கலா
நல்லறி வாளரி னவிந்த நாவெலாம்

[கல்வியால் விளங்குகின்ற உபாத்தியாயர்களின் ஆரவாரம்செய்கின்ற பலவகையானசிறுவர்கள்போல மழைக்காலத்தில் கத்திக்கொண்டிருந்த பலவகைப்பட்ட தவளைகள் எல்லாம் தம்சொற்கள் பயன்படுமிடத்தில் அல்லது ஒன்றும் பேச இசையாத நல்ல அறிவாளிகளைப்போல வாயடங்கிவிட்டன]

நுணலின் கூட்டத்திற்கு நிகராகிய பள்ளிச்சிறுர் இங்குப் பரிகசிக்கப்படுகின்றன ராயினும், நல்லறிவாளரின் திறத்திற்கு உயர்வதால் அந்நுணல் பெருமையடைகின்றது. தவளைகள்வாயொடுங்கின வென்னின் மயில்கள் சிறகொடுங்கின.

தஞ்சிறை யொடுக்கின தழுவு மின்னல
நெஞ்சுறு பயனில நினைப்பு நீண்டன
மஞ்சுறு நெடுமழை பிரிந்த மாமயில்
எஞ்சின மிதிலைநாட் டன்ன மென்னவே

[அழகுடைய பெரிய மேகங்களைக் காணப்பெறுதனவாகிய சிறந்த மயில்கள், தம்சிறகுகளை ஒடுக்கிக்கொண்டனவும், வாழ்வதன் பயனென்றும் தம்மனத்திற் காணுதனவும், சிந்தைமிக்கனவும் ஆகி, மிதிலைநாட்டிற் பிறந்த அன்னம் அனைய சீதையைப்போல ஒடுங்கின]

பிரிந்திருந்த சீதையின் நினைவை இங்ஙனம் மயில்கள் செய்துதருகின்றன. கூடுவோர் நினைவிற்குக் கடலும் நதிகளும் உள:—

செறிபுனற் பூந்துகி றிரைக்கை யாற்றிரைத்
துறுதுணைக் கான்மடுத் தொத்த வோதநீர்
எறுழ்வலிக் கணவனை யெய்தி யாறெலா
முறுவலிக் கின்றன போன்ற முத்தெலாம்

[கடலானது, தன் அலைகளாகிய கைகளால், திரண்ட நீராகிய அழகிய ஆடையை மடக்கிப் பிடித்துத் தனக்கு உற்ற துணைவியாகிய நதிகளை அணைத்துக்கொள்வதற்கு வலிய இழுத்தது போன்றதாக, அந்த நதிகள் எல்லாம், மிக்க வலிமையுடைய அக்கணவனைத் தழுவிப் புன்னகை செய்வதை முத்துக்கள் எல்லாம் ஒத்திருந்தின]

என வரும் வருணனை நயமுற அமைந்திருக்கின்றது. இத்தகைய சிருங்காரச் சுவையில் கம்பருக்கு முற்பட்ட வான்மீகமுனிவர், இச்சாற்காலத் தழகினில் ஒன்ருக, “நாயகரோடு முதன்முதற் கூடுகின்ற மங்கையர்கள் வெட்கத்தினுல் சிறிதுசிறிதாகத் தம் கடிதடங்களைக் காட்டுமாறுபோல இந்தச் சரற்காலத்து நதிகள் தம்மிடத்துள்ள மணற்குன்றுகளை மெல்ல மெல்லக் காட்டுகின்றன” எனத் தன்மைநவிற்சியைத் தழுவிப் பேசுவது சால வியக்கத்தக்கதே.

பாக்குக்குலைகள் பழுக்கின்றன; அது, தலைவரைப் பிரிந்த மாதரையும் அறிவொடு புணர்கிற மாந்தரையும் கம்பருக்கு நினைப்பூட்டுகின்றது:—

சொன்னிறை கேள்வியிற் றொடர்ந்த மாந்தரின்
இன்னிலை பசலையுற் றிருந்த மாதரிற்
றன்னிறம் பயப்பய நீங்கித் தள்ளரும்
பொன்னிறம் பொருந்தின பூகத் தாறெலாம்

[நல்ல சொற்களால் கூறப்படுகின்ற உயரிய விடயங்களைக்கேட்பதில் இடைவிடாதவூக்கமுடைய மனிதரைப் போலவும், இனிமையான பசலைநிறத்தை அடைந்திருந்த மகளிரைப்போலவும், பாக்குமரத்தின் குலைகள் எல்லாம், மெல்ல மெல்லத் தம் பச்சைநிறம் நீங்கி, இகழப்படாத, பொன்னிறத்தை யடைந்தன]

எனச்சாற்றுகின்ருர். கல்வியிற்பெரிய கம்பர்போன்றவர்க்கே கேள்வியின் அருமை தெரியும்; அக்கேள்வியால் மனதின் மேன்மை சிறக்கச் சிறக்க உடலும் பொன்னெனப் பொலியும் போலும். முதலைகளுங் கம்பரால் மறக்கப்படவில்லை:—

பயின் றுடல் குளிர்ப்பவும் பழன நீத்தவண்
இயன்றில விளவெயி லெழுது மெய்யன
வயின்றொறும் வயின்றொறு மடித்த வாயன
துயின்றன விடங்கர்மாத் தடங்க டோறுமே

[முதலைகள், நெடுங்காலம் நீரில்தங்கி உடல் குளிர்ந்ததனுல், வயல்கள் நீர்நிலைகள் ஆகிய அவ்விடங்களில் வசிக்காமல், இளமையான சூரிய கிரணம் தம் உடம்பின்மேல் படிய, நீர்க்கரைகளில் அங்கங்கு வாயை மூடிக்கொண்டு தூங்கிக்கிடந்தன]

சரற்கால வருணனைக்கு இத்தனை பாட்டுப் பாடுவதென்று திட்டஞ்செய்துவிட்டார் கம்பர். நினைக்கக் கூடியவைகளையெல்லாம் நினைத்துநினைத்துச் சொல்கிருர். தவளைகள் ஆயின, முதலைகள் ஆயின, மற்றும்சில சந்துக்களைப் பேசவேண்டுமென்பது இவர் ஆசை. ஒன்றும் நினைவிற்குவரவில்லை. அதற்கிடையில், ஒரு கொடியையேனும் பிடித்துச் சிலேடையோடு செருகலாம் என்று சூழ்ந்து,

கொஞ்சுறுங் கிளிநெடுங் குதலை கூடின
அஞ்சிறை யறுபத வளக வோளிய
எஞ்சலில் குழையன விடைநு டங்குவ
வஞ்சிகள் பொலிந்தன மகளிர் மானவே

[கொஞ்சிக்கொஞ்சிப் பேசுகின்ற கிளிகளின் மிக்கமழலைச் சொற்கள் தங்கப்பெற்றனவும்; அழகிய இறகுகளையுடைய வண்டுகளாகிய கூந்தலின் வரிசையை யுடையனவும், குறையாத குழைகளையுடையனவும், இடைநுடங்குவனவும் ஆகி, மாதர்போல, வஞ்சிக்கொடிகள், விளங்கின]

என ஒருவாறு ஓர் செய்யுளை யமைத்த அயாவுடன் உயிர்ப்புவீங்குமளவில், நத்தைகள் சில வந்து அவர் நினைவில் நுழைந்தன. மாதர்க்குப் பல்லும் அவைகளுக்கு முத்தும் இருக்கும்வரை என்னகுறை:—

அளித்தன முத்தினந் தோற்ப மானனூர்
வெளித்தெதிர் விழிக்கவும் வெள்கி மேன்மையால்
ஒளித்தன வாமென வொடுங்கு கண்ணன
குளித்தன மண்ணிடைக் கூன னந்தெலாம்

[முதுகுவளைந்துள்ள நத்தைகளெல்லாம்—தாம் ஈன்ற முத்துக்கள், மான்போன்ற மாதர்களின் பற்களுக்கு ஒப்பாகாமல் தோல்வி யடைந்ததால், அவர்களுக்கு எதிரில் வெளிப்பட்டு அவர்களைப் பார்ப்பதற்கும் வெட்கப்பட்டுத் தம் மேன்மையினுல் ஒளித்துக்கொள்வனபோல், ஒடுங்கிய கண்களையுடையனவாய்ச் சேற்றில் முழுகின]

மாதர்முன் நிற்க நாணி ஒளிப்பன, ஒன்றல, பல. இதனை நினைத்துவிட்டால் எண்ணற்ற தற்குறிப்பேற்றம் எடுப்பார்கைப் பிள்ளையாய் எளிதில்வந்துவிடும். எனினும், முதலடியில், ஈற்றசையிலன்றிச் சீர்முதல் மோனைதான் வரமாட்டேனென்றுவிட்டது. இந்தக் குறைதீர அடுத்த அடிக்கு முற்றுமோனை சாதிக்கப் பார்க்கின்றுர்; ஆகையாற்றுன் நத்தைகள் ‘மேன்மையால்’ ஒளிக்க நேர்ந்தன. நத்தைகள் செய்தது இது மாத்திரமன்று; தம் மேன்மையால் ஒளித்தனவெனின், கீழ்மையால் ஒளிக்குமொரு நண்டையும் நினைவு செய்துவைத்தன.

மழைபடப் பொதுளிய மருதத் தாமரை
தழைபடப் பேரிலைப் புரையிற் றங்குவ
விழைபடு பெடையொடு மெள்ளி னள்ளிகள்
புழையடைத் தொடுங்கின வச்சை மாக்கள்போல்

[மழைபெய்தபடியால் அடர்ந்த, மருதநிலத்தில் உள்ள தாமரைகள் நன்குவளர, அவற்றின் பெரிய இலைகளின் துவாரத்தில் தங்குவனவாகிய பழிப்பற்ற ஆண்நண்டுகள், தம்மோடுகூடிய பெண்நண்டுகளுடன், லோபிகள்போல, தம் வளைகளின் வாயிலைச் சேற்றுல் அடைத்துக்கொண்டு உள்ளே ஒடுங்கிக்கிடந்தன]

என்னவே முடிகின்றது இக்கார்காலப்படலம். வச்சைமாக்கள்போலத் தம் மனைவியரோடும் வாயிலையடைத்து ஒடுங்கினவேனும் அந்நள்ளிகளை, ‘எள்ளலில்’ நள்ளிகள் என்று கம்பர் அழைக்குமிது கருதற்பாலது. லோபிக்கும் எள்ளப்படாப் புகழ் எய்தியது மோனையின் பொருட்டேயாம் என எண்ணுவார் சிலர். மோனையால் நத்தைகள்மேன்மையுற்றனவெனின், அம்மோனையாற்றுனே நண்டுகளும் பழிதீர்ந்த பெருமை பெறுவது பிழையில்லை ஆயினும், கம்பர் தம் கவிதைப்புகழைக் காத்துக்கொள்ளும் பொருட்டே நண்டை லோபியாக்கி அந்த லோபத்தைப் பழிக்கப்படாதென்றும் பகர்ந்தார் என எண்ணினும் எண்ணலாம். தம் கவிதையால் ஈட்டியுள்ள கடவுட்தத்துவச் செல்வமனைத்தும் வாலிவதைப் படலத்தில் ஈந்துவிட்ட கம்பர், கார்கால வருணையில், உள்ளி உள்ளி உள்ளவெல்லாம் உவந்தீயும் வள்ளியோர் போல், எஞ்சிய கவிதையையும் தேடித் தேடிச் செய்யுள்களாக்கிக் கொடுத்தானபின், சாற்காலமும் வந்து சேர இவர்தான் பாவம் என் செய்வார். இனிக் கொடுப்பதற்கோ தன்பால் கவிதைதான் கடுகத்தனையும் இல்லை. ஈதல் இயையாமல் தாமே வெள்குகின்ருர். இந்தத் தன் வெட்கத்தை வெண்மேகங்களின் மீது ஏற்றி, “எள்கலில் இரவலற்கு ஈவதின்மையால் வெள்கிய மாந்தரின் வெளுத்த மேகமே” என்று சரற்கால வருணனையைத் துவக்கினுர் போலும். ஏற்பது இகழ்ச்சியே யாதலும், புலவர்களிடமிருந்து அவர்தம் கவிதையை ஏற்பது இகழ்ச்சியன்ருதலின், ‘எள்கலில் இரவலர்’ என்றங்கு இயம்பிய தாதல்வேண்டும். இங்ஙனம் விளர்த்த கம்பர் சுவைநயச் சிறப்புக்களற்ற சிலவெள்ளைப் பாட்டுக்களைவழங்கினுர். இவைகளை வெள்ளைப்‘பாடல்கள்’ என்றுகூறத் தற்கால ஆராய்ச்சியாளர் யாரேனும் முன்வருவாராயின், கம்பர் அவருக்குப் பெரிதும் கடன்பட்டவராவார் என்பதில் ஐயமில்லை. களைத்திருந்த கம்பரை அவர் காத்திருந்த கவிதை இங்குக் கைவிட்டோடிவிட்டது.

இதன்உண்மை இதுதான். இது வியப்புமில்லை, இதனால் அவருக்கு இழுக்குமில்லை. இங்ஙனமே, கவிதையானது ஷேக்ஸ்ப்பியரைக் கைவிட்ட இடங்கள் பலப்பல. கொடுப்பதற்கு இனிக் கவிதை இல்லையாயினும், கொடைமறுக்க இசையாமல், வெறும் பாசுரங்களேனும் பகரலாம் என்று முயன்றார். பாவம், மோனையுங்கூட வறளலாயிற்று; சொற்களுஞ் சோர்ந்தன, இனி என் செய்வார்; வழங்கமாட்டாமல் நிற்கும் வறியோனெனத் தோன்றுதலினும், வச்சையன் எனப் பேர் எடுத்தலே மேலாம் எனத் துணிந்து, பெடையுடன்புக் கொடுங்கிய அந்நண்டைப்போலத் தானும் தன் கவிதையுமாய் உட்சென்று கம்பர் கதவடைத்துக்கொண்டுவிட்டார்.

கார்காலப்படலம் முற்றிற்று.

---

# வில்லிபாரதம்

## இராசராசன்—துரியோதனன்

[127-வது பக்கத் தொடர்ச்சி]

இவ்வாறே சுயோதனன் தனது தம்பி துச்சாதனனிடம் எத்தகைய அன்பு வைத்திருந்தானென்பதை ஆராயின், அவனது மனப்பான்மை பின்னும் வெளிப்படையாகத் தெரியவரும். சிறந்த வீரமும் மற்றை உயரிய குணங்களும் இல்லாவிடினும், சுயோதனனுக்குப் பயன்படக்கூடிய அளவற்ற குரூரமும் மிருகத்தன்மையும் துச்சாதனனிடம் மலிந்திருந்தன. அவை பயன்படுமாறு எவ்வாறெனில், அரசவையில் சுயோதனது கொடிய எண்ணங்கள், கன்னனையுந் துச்சாதனனையுங் கொண்டே என்றும் வெளிப்படவேண்டியிருக்கின்றன. அரசனது கருத்துக்களை வெட்டவெளிச்சமாகச் சொல்லி, அவனுக்குச்சேரவேண்டிய வசைகளைத் தமக்கு ஆக்கிக்கொள்வதில் துச்சாதனனும் கன்னனும் போட்டியிடுகின்றனர். அன்றியும் அரசன்செய்யவிழையும் இழிவுச்செயல்களைத் துச்சாதனனே மேற்கொண்டு செய்வதில் தீரன். பாஞ்சாலியைச் சபையில் இழுத்துக்கொண்டு வருவதற்கும், பளிக்கறையில் தன்னைப்பார்த்து நகைத்திட்ட 'அப்பொதுமகளை'த் துகிலுரியவும் துச்சாதனனது துணையன்றோ வேண்டியிருந்தது. துகிலுரிந்ததும் போதாமல் அவளைத் தன் மடிமேலிருத்திப் பின்னும் அவமானப்படுத்தவும் நினைத்த சுயோதனன் அவைகளில் மிகுந்த திருப்தியடைந்திருக்கவேண்டும் என்பதில் ஐயமில்லை. ஆனால் அவற்றைத் தான் செய்ய நேர்ந்தால் தனது இராசசபையின் மதிப்பும் பதமும் கெடுமென்றுன்னியபோது துச்சாதனனன்றோ நல்ல கையுதவியாய் வந்தமைந்தான். மேலும் தான் நேரில் வாய்விட்டுரைக்கச்சங்கடமாயிருந்தபோது துச்சாதனன் மூலமாகவே சுயோதனன் செய்தி சொல்லியனுப்புவதும் உண்டு. உதாரணமாக, எட்டு நாள் போரளவும் பகையை வெல்லக் காணுததால், துரியோதனன் கன்னனைப் போர்செய்யுமாறு வினவ, அவன் 'வீடுமன் தோற்றுப் புறக்கவ்வட்டும்' என்று மொழிந்த இறுமாப்புரைகளைத்தான் வீடுமனிடம் நேரே சென்று மொழியக்கூசியபோது துச்சாதனனன்றோ, 'நாளைநாம்முடித்தும்வெய்யபோரென' விருக்கும் பிதாமகனிடம் கன்னனது புன்மொழிகளைச் சிறிதேனும் பிழைபடாமல் கூறினன்? இன்னவாறு ஏவலை மேற்கொள்வதில் எடுத்துக்காட்டாகச் சொல்லப்படும் நாய் குதிரை முதலிய மிருகங்களினும் நன்றிமிக்க தன் தம்பி துச்சாதனனிடம் பாவம் சுயோதனனுக்குச் சிறிதேனும் வாஞ்சையில்லை. அவன் பட்டபோது, கன்னனுவது

வேந்தனனைய விறல்தம்பி வீமன்கை
மாய்ந்த நிலைகண்டு மனந்தளர்ந்த தல்லாது
கூர்ந்ததிறன் மத்திரத்தார் கோவே வெருவுமோ
பாந்தளெதிர் செல்லப் பறவைக் கரசென்றான்.

என்றபடி கலக்கமுற்றானேயல்லது, இராசராசன் ஒரு சிறுபுலம்புறுசொல்லேனும்பயின்றதைநமதுபாரதம் அறியாது. மலைகலங்கினும் மாதிரம் கலங்கினும் கலங்காத அவ்வுள்ளம் கேவலம் ஒரு உடன்பிறந்தானது பிரிவுக்காகக் கலங்குமோ! அல்லது மகனது பிரிவுக்காகத்தான் உண்மையில் கலங்கிற்று?'ஊர் வேண்டேன் பேர் வேண்டேன், அரசுவேண்டேன்' என்று கூறியதில் மகனுக்காகப்பட்ட துயரமில்லை:' இவைகளெல்லாம் என்னைப் பிரிகின்றனவே, பாண்டவர் தினமும் நமதுசேனைகளைக் கொன்றுகுவிக்கின்றனரே' என்னும் துயரமும், சேனைகளுக்கும் துரோணனுக்கும் தயையும் வீரத்தையும் ஊட்டும் பிரலாபஅபிநயமுந்தான் அதில் தோன்றுகிறது. மற்றைப்படி அவன் ஏன் கலக்கமுறவேண்டும்? போரில் கிரீடியையெதிர்க்க அஞ்சும் வீரனாயினும், எல்லாவுலகும் திருவடியின் மறைந்திட நின்றதோர் உருவத்தைக்கண்டு சதகோடி சராசரங்களும் நெஞ்சம்கலங்கும்நிலையில், கலங்காத இதயமுள்ளவனன்றோ அவன்! அல்லது, கலங்குவதற்கு இதயமென்பதில்லாத திருவாளனன்றோ? இராவணனோவெனின், திசையானைக் கோடுழுதமார்பனாயினும், இராகவன்வாளி தன் மெய்யில் தோய்ந்ததும், 'நாசம்வந்துற்றகாலை நல்லதோர் பகையைப் பெற்றேன்'என்று கலங்கிய நெஞ்சத்தவன். இராமன் மார்பில் மயனது வேல் தெறித்து உதிர்ந்ததும், அச்சமுற்று—ஆம், பெரிதும் அச்சமுற்று—விபீடணன் கூறிய முழுமுதல்வனே இவனென்று நின்ற திருவாளன், ஞானம் பிறந்தவன் †; ஆட்கொள்ளப்பட்டவன், வாளி யுருவாத மார்பனாயினும் நெஞ்சமென்பதில்லாத சுயோதனனைப் போன்றவன் அல்லன்; மார்பு இற்றதேனும் இதயம் கெடாத கவிதையுள்ளத்தன்; ஆன்ம உணர்ச்சிகளில் தலைசிறந்த, தயை இரக்கம் முதலியவற்றால் தூண்டப்படாதவனாயினும், வீரம் காதல், வாஞ்சை என்னும் உணர்ச்சிகளால் தூண்டப்படுபவன். அவ்வாஞ்சையன்றோ, தனது குலம் தலைதூக்கி நிற்கவேண்டும் எனத் தன் குலத்தின்கண் வைத்த ஒரு பரிவன்றோ, தலையையும் அரிந்து யாகம் செய்யும்படி அவனைத் தூண்டியது? மற்றைப்படி, சகோதரியின் கணவன் இறந்ததையும் கருதாமல்,'வெந்தணல் குளிக்குவன் விஜயனென்று' துள்ளியார்த்த சுயோதனனுக்கும், தன் சோதரி மூக்கறுந்த நிலையில் தன்னை நண்ணியபோது,"இருந்தனன் இராவணன் இன்னுயிர்கொ டின்னும்" என்று உணர்ச்சிததும்பும் வாசகம் கூறியவனுக்கும் உள்ள குணபேதம் வெள்ளிடை மலை. இன்னும், துச்சாதனன் பட்டபோது சிறிதேனும் விசனமுறாது சுயோதனன் அங்கு நிற்ப, தன்னொடு முரண்பட்டு வெறுப்புடனும் துயரத்துடனும் போருக்கு ஏகிய கும்பகர்ணன் வீழ்ந்தபோது, 'ஊரொடும்‡ பொருந்தித் தோன்றும் ஒளியவன் வீழ்ந்ததுபோலும், மராமரம் கிளைகளோடும் வீழ்வதைப்போலும், மூர்ச்சையடைந்து வீழ்ந்து, "இன்னும் சிலரோடு ஒருவயிற்றின் யார்பிறப்பார்" என்று இராவணன் 'அண்டமுற்ற அரற்றிய' நிலைமையைக் காண்மின். மேலும் சாமகானம் பாடும் சிறந்த கவிதையுள்ளத்தவனான அவன், இசையினாலேயே பொருளையுணர்த்தும் ஒரு பாட்டு இயம்புவான்,—

ஏழை மகளிர் அடிவருட ஈர்ந்தென்றல்
வாழும் மணியரங்கில் பூம்பள்ளி வைகுவாய்
சூழும் அலகை துணங்கைப் பறைதுவைப்பப்
பூழியணைமேற் றுயின்றனையோ போர்க்களத்தே.

என்று பாடிய அவனது ஆன்ம உணர்ச்சியை('ஹிருதய பாவத்தை*') தெளிவாகக் காண்பதன்றி இப்பாட்டின் மற்றைய அழகுகளைக்கண்டு, அதனில்மயங்கி, சுயோதனனது குணவாராய்ச்சியை மறந்துவிட வேண்டா. சுயோதனனோ கவிதைச்சுவை அறிந்தவனல்லன். மிகுந்தவாக்குவன்மை யுடையோனேனும், அவனுக்குக்கவிதையும்கல்வியும் (காவியங்கள்கற்றுப்பிறந்த உணர்ச்சிகளின் செவ்வியேகல்விஎனப்படுவது,) ஒருசிறிதும் இல்லை. மற்று, அத்தகைய கல்வியாளர்களெல்லாம் உலகவிருத்தியில் குறைந்த பயனை அடைகின்றனராதலின், உலகாதாயமேநாடுவோர்க்கு அக்கல்வி, செய்கையின் ஆற்றலைச் செலவிடும் பிழைபோன்றதேயாம். இவ்விஷயத்தில் 'வித்தையா விசாரமா' என்று சேர்த்துச் சொல்லப்படுகின்ற கல்விக்கும் காதல்விசாரத்திற்கும் பலவித ஒற்றுமையுண்டு. இரண்டும் பிரபஞ்ச உண்மைகளுடன் மாறுபட்டுத் தனிமையை நாடச்செய்கின்றன. இரண்டும் தான் தானே பிரபஞ்சமாய் நம் கண்முன் காட்சி தருகின்றன. உலகத்திலில்லாத வியப்புக்களையும் இன்பங்களையும் ஊட்டுகின்றன. இந்த உலக இன்பங்களையும் வியப்புக்களையும் புதியதோர்கண்கொண்டு பார்க்கச் செய்கின்றன. உலகஇயல்புக் கேலாத உரைகளையும் செய்கைகளையும் பயிற்றச் செய்கின்றன. இவ்விரண்டும் ஒருங்கே சேர்ந்திருக்கின்ற இராவணனது உரைகள் அவனுக்கெவ்வகையிலேனும் பகைமையைத் தேடிக் கொடுப்பனவாகவே யிருப்பனவேயல்லாமல் சுயோதனனது வசனங்களைப்போல் பகைவரையும் தன்வசமாக்கும் பெற்றிவாய்ந்தவனவல்ல.*

எவ்வகையிலும் தன் இதத்தையேநாடுகின்ற கும்பகர்ணன், இந்திரசித்து வீடணன் முதலியோரிடத்திலும் கடுஞ்சொல்லன்றி இன்சொல்பயிற்றியறியான் இராவணன். தன் இனியவசனங்களினாலே உலகெல்லாம் வென்றிகொள்ள ஆற்றல்வாய்ந்த சுயோதனன் அசுவத்தாமனிடமாவது கிருபாசாரியனிடமாவது துரோணனிடமாவது கன்னனிடமாவது மற்றும் தன் சபையில்உள்ள யாரிடமாவது அவ்வாறு கடுஞ்சொல் பேசியதை அறிவோமா? பேசுவானென்றேனும் நினைக்கப் போகுமா? இராவணன் கவிதையாளனைப்போலவே ஒருதரம் நடந்துகொண்டான் என்பதை விளக்க ஒரு உதாரணம் காணப்படுகின்றது. இராமபிரான் அம் முழுமுதலின் அவதாரமாமென்றும், அவன் இதுவரையில்கொல்லாதிருந்தானெனினும், இனித் தன்சொரூபத்தை உண்மையில் காட்டுவானென்றும் விபீடணன் மதிகூறியதற்கு, எதிராக இராவணன்,

வந்த போர்தொறும் துரந்தநாள் வானவ ருலகை
சிந்த வென்றநாள் சிறியன்கோல் நீசொன்ன தேவன்

என்று கூறித் தன் கைபெறிந்துஇடியேறென்ன நக்கானும், (சிரித்தானும்). ஒரு ஏழைக்கவிஞனுக்குப்புதியதொரு கருத்துத்தோன்றுமானால் எப்படிஅவன் ஆரவாரம்செய்து கொண்டாடுவனோ அவ்வாறே தான் புதியதொரு கருத்தைக் கண்டுபிடித்ததற்காகக் கைகொட்டி இடிபோலும் ஒலிசெய்து நகைத்தான் இவ்விராவணன். சாதாரணமாகப் புலவர்களிடமே இத்தகைய சேஷ்டைகளைக் காண்போமேயன்றி, மற்றைப்படி உலகோடொத்து வாழுமவரிடத்து நாம் இவ்வாறு காண்டல்அரிது. ஆனால்,சுயோதனனோவென்னில் ஒரு சிறுசந்தர்ப்பத்திலேனும் மேற்கண்டவாறு நடந்திருப்பான் என்று நாம் நினைக்க இடந்தருகின்றானா? இவ்விடத்தில் மறுபடியும் அவ் வால்போலின் ஞாபகம் வருகின்றது. வால்போலுக்கு முன்னேயிருந்த மந்திரிகள் மாண்டகு முதலாயினோர் தாங்களும் ஒரு சிறிது கவிதை எழுதுவதல்லாமல், கவிஞர்களுக்கும் பதவிகள் முதலியன அளித்துச் சீரும் சிறப்பும் பெற வைத்தனர். ஆனால், வால்போல் பதவிக்குவந்த பின்னர் ஒரு கவிஞனுக்கும் அத்தகைய உதவிகள் செய்தானல்லன். அவர்களாலேயே அரசாங்கம்கெடுகிறதென்று நினைத்த அவன், 'சிறந்த கவிதைக்கருத்துகளினும் தன் நண்பனொருவனது ஆபாசப் பேச்சில் மிகுந்த பிடித்தம் வைத்திருந்தானும்.' ஆயினும், அவனும் தனதுநண்பன் எங் என்னும் கவிஞனுக்குச் சிறிது சிறிது உதவிசெய்துவந்தானும். வேறொருவ

---

† சுயோதனன் அச்சமுறாத பான்மையை அவனது பாவம் என்றும், இராவணனது அச்சத்தை அவனது புண்ணியமென்றும் சொல்லத் தடையில்லை. 'பரஞ்சோதியின் கூறுகளாகிய அறமுதலிய ஒளிகள் இவ்விருள் தரு மா ஞாலத்தில் மங்கி விளங்குகின்றமையின் அவ்வொளிவழியே நாடுவோர் அச்சமென்னும் கயிறுபிடித்தே பிலநீக்கம் (உய்வு)பெறுவர்' என்று நான், தாமஸ்ஹார்டியின் கூற்றையொட்டி, 'தருமன் மாண்பு' என்னும் கட்டுரையில் கூறியதை இங்கு நினைவுக்குக் கொண்டுவருதல் நலம்.

‡ ஊர் - பரிவேட்டம்.

* இசையில் ஹிருதயபாவமே பிரதானம் என்றும் அல்லவென்றும் ஆனந்த விகடன் தாள்களிலும் மற்றும் வேறிடங்களிலும் நெடுநாள் விவாதம் நடந்ததை நேயர்கள் அறிவார்கள். இசைக்கு 'இருதயபாவம்' வேண்டுவதாதலின் இசையிற் சிறந்த இராவணனும் 'இருதயபாவமுள்ளான்' அதவாது ஆன்மபுணர்ச்சியுள்ளவன்என்பதும் நேர்பாடான ஊகம் அல்லவோ? சுயோதனன்மாட்டு இவ்வாறு ஒன்றும் ஊகிப்பதற் கில்லை.

* தன் சொல்லாலும் செய்கையாலும் வீண்பகைகள் அளவற்றன தேடிக்கொள்கிறான் இராவணன். நந்திதேவரைக் குரங்கென்றுபேசி எளிதில் ஒரு சாபத்தைத்தேடிக்கொள்கின்றான். சிவபிரானது மலையைத் தூக்க முயன்று துன்பமுறுகிறான். இவ்வாறே பயனிலாத பலசெய்து யாவரையும் பகைவராக்கிக்கொள்வதில் [illegible] மிக்க திறனுடையவனே.

M211, N28K N
111207

ரிடத்து வைக்காத பரிவைச் சுயோதனன், கன்னன் மாட்டுக் கொண்டதையே ஒக்கும் இது. இவ்வாறு இக்கதாநாயகனுக்கும் அச் சரித்திர புருஷனுக்கும் உள்ள ஒற்றுமையை இன்னும் சிறிதுவிரிக்கலாமெனினும், 'ஒப்புக்காட்டுதல் ஒழுங்கன்று' என்று ஷேக்ஸ்ப்பியர் கூறியிருப்பதை மதித்து † இத்துடன் அவ்வொப்புமையை நிறுத்திக்கொள்ளுதல் நலம்.

† Comparisons are odious.

# சூளாமணி

[119-வது பக்கத் தொடர்ச்சி]

4. இரதநூபுரச் சருக்கம்

101. அந்நங்கை தன்வரவைத் தன் தந்தையாகிய வெஞ்சுடர் வேலவனுக்கு அறிவிக்கின்றாள். கடைகாவலாளர் சென்றுஉணர்த்தியபின் மெல்ல உள்ளே நடந்து செல்கின்றாள். அரசனுடைய கட்டளையைப் பெற்றுவந்தோர் இவளடி வாழ்த்தி உள்ளழைத்துச் செல்கின்றனர். உடன் வந்த தோழியரும் தன் சேவடியை வாழ்த்திக்கொண்டே உடன் புகுகின்றனர். மெல்லென நடந்தாலும் அடிசிவக்கும் இவளுக்கு, மெல்லென்ற மலர் பட்டாலும் கைசிவக்கும். அழகிய வொளிக்கொழுந்துகள்போன்ற மெல்விரல்களை அழகொளி மலரவிரித்து அரசத்தன்மைசெவ்விதாய் விளங்குகிற அவ்வரசனுடைய ஆளப்பிறந்த உள்ளங்கையிலே, சேடத்தைத் தருகின்றாள்.

102. பூவின்புறவிதழின் வன்மையும் பொறாது அகவிதழ் அணிந்த அந்நங்கை, அழகிய பூங்கொடியைப் போல, வணங்குகின்றாள்; அவளணிந்திருந்த பூவல்லிகளில் அன்றலர்ந்த செவ்வி மாறாது தேன் நிறைந்திருப்பதால், வண்டுகள் மொய்த்துள்ளன. அவ்வண்டுகள், விரைந்து நிகழும் வணக்கம் எனும் இவ்வியக்கத்தால் திடுக்கிட்டு மேலே பறந்தெழுகின்றன. அரசன் தன்மகளை வாரியெடுத்து, முல்லையொழுக்க வடிவாம் முல்லைப்பூ முடித்து ஒளிரும் அந்நங்கையை உச்சிமோந்து மகிழ்கின்றான். இவளது கலக்கலாகாக் கற்பின் வலியை மனக்கண்ணால்கண்டது மரசனுடைய வேல் முன்னினும் பன்மடங்கு ஒளிபெற்று மிளிருகின்றது. சில சொற்களைப் பேசுகிறான்—வணங்கிய விரைவை வண்டுகளின்மேல் வைத்து இப் பாவலர் பெருமான்பாடியதை இவர் பின்வந்தோர் பின்பற்றியுள்ளனர். தன்னுடைய பட்டத்துயானை இறந்தது என்பதைக் கேட்டார் சேக்கிழார் படைத்த புகழ்ச் சோழர், "கிளர்மணித் தோள் அலங்கல் சுரும்பினம் கிளர்ந்து பொங்க" வெளியே வந்தனராம். தோலாமொழித் தேவர் மகளின் இயக்கத்தையும் வண்டின் இயக்கத்தையும் வெளிப்படையாகக் கூறியுள்ளார். சேக்கிழார் வண்டின் இயக்கத்தை வெளிப்படையாகக்கூறி மன்னன்நிலையை அதினின்றும் உய்த்துணர வைக்கின்றார்.

103. அரசன் சில அன்புமொழிகளைக் கூறுகின்றான். அவளாலேயே தானும் தன் குடியும் வாழ்ந்தமையை விளக்குகின்றான். "தேன் நிறைந்துள்ள பூங்கொத்துக்கள் பல இருப்பினும், செவ்விய தளிராற் சிறந்த மாவிளங்கொத்தன்றோ வசந்தகாலச் செல்வனது முகம்மலர மலர்ந்து தோன்றுவது. அதனையே போல மக்கள் பிறரிருப்பினும், பூங்கொத்தா லழகிய மகளே! நீ பிறந்தபின் னன்றோ, பொன்னரி மாலையணிந்த அரசரெல்லாம் உவப்புடன் வந்து என்னை இறைஞ்சயான் சிறப்புப்பெற்று விளங்குகின்றேன்" என்றான். இது வாய்மையேயன்றி வெறும் பாராட்டு மொழிகள் அல்ல.

நங்கை தோன்றிய பின்னகை வேலினாற்
கங்கண் ஞாலம் அமர்ந்தடி மைத்தொழில்
தங்க நீண்முடி யாற்றலை நின்றனர்
வெங்கண் யானை விளங்கொளி வேந்தரே

என மேலே 41ம் பாட்டில் தேவர் தம்வாயாற் கூறினார். கூத்துநூல் நயம் பெருக, அதனை அரசன் வாய்வைத்துக் கூறுகிறார் இங்கே. வயந்தத்தினை மாமரம் சிறப்பிக்கும் அழகு தோலாமொழித்தேவர் உள்ளத்தைக் கவர்ந்தகொன்றாகும். நகரச்சருக்கத்தில்,

பூங்குழை மகளிர்க் கெல்லாம்
பொன்மலர் மணிக்கொம் பன்ன
தேங்குழன் மங்கை மார்கள்
திலதமாய்த் திகழ நின்றார்
மாங்கொழுந் தசோக மென்றாங்
கிரண்டுமே வயந்த காலத்
தாங்கொழுந் தவற்றை யெல்லா
மணிபெற அலரு மன்றே

எனப் பாடியமை காண்க. இளவேனிலைப் புனைந்துரைத்தார் இவ்விரு மரங்களையும் பலபடப் புனைந்துரைத்தமையும் கண்டோம். வடநூற்புலமை மிக்க இந்தச் சமணப்பாவலர் காளிதாசனிடம் இருந்து இக்கருத்தினைக் கடன் வாங்கினாரோ? மைந்நாகன் முதலிய பிள்ளைகளைப் பெற்றவனாயிருந்தும் மலையரசன் பார்வதியைப் பெண்ணாகப் பெற்றபோது, அவ்வம்மையாரிடத்தே எழுந்த அன்பிற்கு ஒரு முடிவில்லை. "வசந்தகாலத்தில் பலமலர்கள் இருந்தாலும் வண்டுகளின் சிறப்புநாட்டம் மாம்பூவிலே யன்றோ" எனக் குமாரசம்பவத்தே(1சர்க்கம்-27 பா) அப்புலவர்பெருமான் பாடுவது காண்க.

104. இக்கருத்தினையே அரசன் தன் அன்பின் மிகுதியால் பலவகையாலும் விளக்குகின்றான். "கங்கை நீர் பாய்ந்தபோது கடலும் தீர்த்தமாகிறது. கடலால் சூழப்பட்ட இவ்வுலகனைத்தும் கடல் வந்து கூற அறிந்தாற்போல, இவ்வுண்மையை அறிந்துள்ளது. நங்காய் நீ பிறந்தபின் கப்பலோடும் கடலை எல்லையாகவுடைய உலகமுழுதும் நங்குடியை வணங்குகின்றது.

105. "பகற் பொழுதில் தாமரை பூத்தொளிரும் இயற்கையாய்த்தோன்றிய பொய்கையில் (பொய்கை மானிட ராக்காத நீர்நிலை-நச்சினார்க்கினியர்) அன்னமேயன்றித் தீயனவாம் கீழின உயிர்ப்பிறவிகள் அதனைத் தீண்டவும் அருகுவருவதில்லை. அழகு நிலவு மடந்தாய், நீ பிறந்தபின்னர் இவ்வுலகவட்டமும், பகைவர்கள் தோற்று ஓடிப்போகும்படியாக அவர்களெல்லையைக்கடந்துநிற்கின்றது. தோற்றோடுவது வே



லின் குத்துப்பட்டன்று. காக்கையுகப்பது சுடுகாடு. அது விரும்பும் பொருள் பொய்கையில் இல்லை. அங்ஙனமே ஏதிலார் விரும்பலாம் பொருள் இவள் பிறந்தபின் இல்லையாகவே இவ்வுலகவட்டத்தைக் கடந்து தாம் விரும்பும் பொருளை நாடி வேறு எங்கோசென்றனர்"

106. "வானகத்தில் இளம்பிறை நாள்தோறும் வளர்ந்துகொண்டே வர, அது கண்டு வையகமாம் இவ்விடமும் இருள் நீங்கி இன்பம் பெறுகிறது. நறுமண நெய் பூசிய கூந்தலுடையாய்! நீ வளர்தலால், நம் குடியும் விளையிருளும் மயக்க இருளும் பகையிருளும் இன்றி அறிவாய் இன்பாய் அன்பாய் ஒளிர்கின்றது."

107. "வண்டு மூசாத சண்பகத்திற் சிறந்த பூங்காவனத்தே கண்ணையே விலையாகக் கூறிக் கவர்கின்ற அத்தகைய அழகிய மல்லிகைப் பூக்கள் மலர்ந்து மணம் வீசுதலால், வண்டுகள் அங்கேயும் வந்து மிக மிக விருப்புடன் மொய்க்கின்றன. பெண்களே சிறப்பித்துப் புகழும் திருமகளே அனையாய், நீ பிறந்தபின், நம் குடி, மண் என்று வழங்கிவரும் இவ்வுலகெலாம் மகிழுமாறு தான் ஒரு சார்பாகித் திகழ்கின்றது."

108. கொவ்வைக்கனி போலும் செக்கச் சிவந்த உதடுகளாற் சிறந்தொளிரும் அழகிய வாயினளுக்கு இவ்வாறு அழகிய சொற்களைக் கூறுகின்றான் அரசன். பின்னே, "அன்னாய், இதுவரை நோன்பு நோற்றிளைத்தாய. இதுபோது நின் அன்னை தன் அரண்மனையிற் போய் உணவினைக்கொள்க" என்று அம் முல்லை மலர் முடித்த கூந்தலுடையாளுக்குச் செலவு தருகின்றாள். அரசனுக்கு முதலிலும் முடிவிலும் இவ்வாறு கற்பொழுக்கமாம் முல்லைமலரே தோன்றும்படி பாடுகின்றார் தோலாமொழித்தேவர்.

109. அரசன் அவளுடைய மேன்மையை நோக்குகின்றான். உடன் வந்த குற்றேவல் மகளிரை நோக்கி, "பெரிய அணிகலன்கள் அணியின் இவளுடைய இடைநோம். இப் பதுமையன்னளாம் என்மகள் சிலம்பொன்றே அணிந்து வெல்க" என்று கட்டளையிட்டருள்கிறான். மகள் நடந்து செல்கிறாள். அதில் ஈடுபட்டு மகிழ்ந்து நோக்குகிறான். ஏழ்மையால் இவ்வாறு கூறுகின்றானல்லன்.


# கலா நிலயம்

## முன்னைய வால்யூம்கள் இன்னும் சிலவே இருக்கின்றன, உடனே பெற்றுக்கொள்வது நலம்.

**1928, 1930, 1931, 1932, 1933, 1934** வருடத்தியவை கிடைக்கும்.

| | | | | |
|---|---|---|---|---|
| பைண்ட் செய்யாதவை—ஒவ்வொரு வால்யூமின் விலை | ரூ. | 7 | 8 | 0 |
| ஆப்லெதர் கில்ட் பைண்ட் | ,, | 9 | 0 | 0 |
| ஒரு வால்யூமை இரண்டு பாகமாகப் பிரித்துப் பைண்ட் செய்தது | | 10 | 0 | 0 |

இந்தியாவிற்குள் இருப்பவர், இரயில்வே பார்சல் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். பர்மா, ஸிலோன், மலேயா முதலிய இடங்களுக்குத் தபால் மூலமாகத் தான் அனுப்ப இயலும். இந்தியா பர்மா ஸிலோனில் உள்ள இடங்களுக்கு வால்யூம் ஒன்றிற்கு ரூ. 2-ம், மலேயா, தென்னாப்பிரிக்கா முதலிய வெளிநாடுகளுக்கு ரூ. 3-ம், தபால் பார்ஸல் சார்ஜ் ஆகும்.

இந்தியாவில் உள்ளவர் வேண்டிய வால்யூமின் விலையை அனுப்பித் தம்மூருக்கு அடுத்திருக்கும் இரயில் ஸ்டேஷனைத் தெரிவிக்கவும். அல்லது தபால் பார்ஸலில் பெற்றுக்கொள்ள விரும்பினால், அந்தக் கட்டணத்தையும் சேர்த்து அனுப்பவும்.

வெளி நாடுகளில் உள்ளவர் வேண்டிய வால்யூம்களின் விலையையும் தபால் கட்டணத்தையும் சேர்த்து அனுப்புதல் வேண்டும். இவைகளை வி. பி. யில் அனுப்ப இயல்வதில்லை.



ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட்ஸ் நஞ்சன்கூடு "சத்வைத்யசாலை" மருந்துகள்
"ஆல்மண்டைன்" (டானிக்). "பாலக்ஸ்" பேதிமாத்திரை. "ஸ்ப்ளிவரால்" (குழந்தை கட்டிக்கு)
சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.
சோரோஜனா மாத்திரை
தயவுசெய்து கவனித்து வாங்கவும்.
I.D.L. 61. மேடிசேடட் டப்பி
சியாவனப்ராச
சிறந்த டானிக்
சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு
ஜவரேக்
[பஸ்மங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]


199207

KALANILAYAM
REG. NO. M. 2324.

## வர்த்தமானம்

நீர்மேல் நடக்கலாம்:—ஜெர்மனியின் பிரபல விஞ்ஞானிகளுள் ஒருவராகிய பிரடெரிக் வால்தர் என்னும் ஜெர்மானியர் நீர் மேல் நடக்க, ஒருவகை "பூட்ஸு"களைக் கண்டுபிடித்திருக்கின்றார். அவைகளைக் கொண்டு நீர்மேல் நடப்பது சாத்தியமாகுமாம். அந்த "பூட்ஸ்" படகைப் போன்ற அமைப்புள்ளதாய் ஒவ்வொன்றும் 55 பவுண்டு கனமுள்ளதாய் 6 அடி நீளமும், 8 அங்குல ஆழமும், 10 அங்குல அகலமுமுள்ளதாய்ச் சிறுசிறு உலோகத் துண்டுகளால் செய்யப்பட்டதா யிருக்கிறது. அதில் நடக்க விரும்புபவர்கள் காலை அந்த பூட்ஸுகளுடன் சேர்த்துக் கட்டிக் கொள்ளவேண்டும்.

அவர் அந்த நவீனமான பூட்சுகளைத் தம் கால்களில் கட்டிக்கொண்டு நீர்மேல் நடக்கக்கூடும் என்பதை நிரூபித்து வைத்தார். அவற்றைக் காலில் கட்டிக் கொண்டு ஒவ்வொரு கையிலும் 6 அடி உயரமுள்ள மூங்கிற் கழிகளைப் பிடித்துக்கொண்டு நீரில் நின்றுகொண்டார். அந்த மூங்கிற் கழிகளின் மற்றொரு முனையில் "ஸிலிண்டர்" ஒவ்வொன்று இணைக்கப் பட்டிருந்தது. அந்த ஸிலிண்டர்கள் தண்ணீரை வேகமாகத் தாக்குவதால் அந்த பூட்ஸுகள் முன்னுக்குத் தள்ளப்படுவதன் மூலம் முன்னுக்குச் செல்ல முடிகிறது. இதை அவர் செய்து காட்டினார். ஏற்கெனவே அவர் டிவார் துறைமுகத்தில் குறுக்காக நடந்து சென்று கடலைக் கடந்தார். இப்போது அவர் பிரிட்டிஷ் கால்வாயை நடந்துகடக்க முயன்று வருகிறார். ஒரு மணி நேரத்துக்கு 5 மைல் விகிதம் அந்தப் பிரிட்டிஷ் கால்வாயை 5 மணி நேரத்தில் கடந்துவிடக் கூடுமென்று அவர் உத்தேசித்திருக்கிறார்.

அரிய காதல்:—ருமேனியாவின் தலைநகரமான புகாரஸ்டில் ஒரு விநோத உண்மைக் காதற்கதை நிகழ்ந்திருக்கின்றது. ஜோகப் மாலஸ்கீ என்ற 25 வயதுள்ள வாலிபன் புகாரஸ்ட் வைத்தியசாலையில் படுக்கையில் இருந்தபோது பக்கத்து அறையில் வேலை பார்த்துவந்த தாதியைக் காதலித்துவந்தான். இவ்வாலிபன் நோய் குணமானவுடன் வைத்தியசாலையிலிருந்து வெளிவந்தான். ஆனால் இவன் அந்தத் தாதியை மறக்கவில்லை. மறுபடியும் வைத்தியசாலைக்குச் சென்று அவளையே பார்த்துக்கொண்டிருக்கவேண்டி இருபத்தைந்து தடவை பாஷாணம் அருந்தி வைத்தியசாலைக்குச் சென்றான். ஆனால் வைத்தியர்கள் வாலிபனை, நர்ஸ் வேலை பார்த்துவந்த அறையிலோ பக்கத்து அறையிலோ வைக்கவில்லை. வாலிபனும் சளைக்காமல் பாஷாணம் அருந்திக்கொண்டேயிருந்தான். முடிவில் 25-வது தடவை வெற்றிபெற்றான். நர்ஸ் வேலை பார்த்துவந்த அறைக்கு எந்த வியாதிவர வேண்டுமோ அதை வரவழைத்துக் கொண்டு அவளை அவள் அறையிலேயே கண்டு தனதுமாறாக்காதலை அறிவித்துப் பிறகு அவளையே மணஞ் செய்து கொண்டான். இது கதையல்ல உண்மைச் சம்பவம். புகாரஸ்டில் நிகழ்ந்திருக்கின்றது.

NATIONAL
INSURANCE COMPANY, LIMITED.
Head Office:
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.

1933 Results.

New Business Completed exceeds ... ... Rs. 1,67,00,000

The Company with a steady progress all round.
All forms of life assurance policies issued at low safe rates of premium.

Specialities.

Female Lives
Joint Lives
Permanent Protection Policies
Triple Benefit Policies.
Marriage & Future Provision Policies.

For agencies please apply to:—

Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., Managers.

Consult
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
Head Office:—
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.
for Fire, Motor & Accident policies.

A sound Company.
Please apply for particulars to:—

Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., Managers.

இண்டோ-கம்மர்ஷியல்
பாங்க், லிமிடெட்.
மாயவரம்
சென்னை ஆபீஸ், 107. அரண்மனைக்காரத் தெரு,
பஜார் பிராஞ்சு, 260. சைனாபஜார் ரோட்,
மதுரை, காரைக்குடி, விருதுநகர்,
கும்பகோணம், திருவாரூர்,
ஈரோடு, தூத்துக்குடி,
விஜயநகரம்,
புதுக்கோட்டை,
திருநெல்வேலி.
சப்-ஆபீஸ்
சீர்காழி & சிதம்பரம்
எல்லா வகையான பாங்கி அலுவல்களும் ஏற்றுக்கொள்ளப்படும். நிபந்தனைகள் எழுதித் தெரிந்துகொள்ளலாம்.
S. N. N. சங்கரலிங்க அய்யர்,
மானேஜிங் டைரக்டர்,
107. அரண்மனைக்கார தெரு, ஜி, டி. மதராஸ்.

சிறந்த பலவிருத்தி ஔஷதம்
சென்ற 53 வருஷங்களாகப் பேரும் புகழும் பெற்று உலாவி வருகின்றன.
ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்
மலச்சிக்கல், தேகஅசதி நரம்புகளின் தளர்ச்சி, ஞாபகக் குறைவு முதலிய வியாதிகளைக் கரஸ்தமாகக் கண்டிக்கும்.
32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூ. 1
இனும்! "காம சாஸ்திரம்" இனும்!!
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26 பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road, and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)